Registered as a News Paper in Ceylon

★ ★

விலை சதம் 15

25 FEB 1971
UNDERGRADUATE LIBRARY

போன்: 7199

பொ. அம்பலவாணர்

தங்க வைர

நகை வியாபாரம்

119, கஸ்தூரியார் ரோட்,

யாழ்ப்பாணம்.

# ஈழநாடு

EELA NADU

தேசிய தினசரி

அன்டன்

அலுமினியம் லூவர்ஸ்,

ஸ்லொட்டட்

ஆங்கிள் அயன்

மொத்தமாகவும், சில்லறையாகவும்

கிடைக்குமிடம்:-

கதிர் ஹார்ட்வெயர்ஸ்

11/1, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7130

மலர் 13 மாசி 13 ஜுஹஜ் 28 (25—2—71) வியாழக்கிழமை இதழ் 16

# தமிழர் ஒற்றுமை முன்னணி பிரதமரைச் சந்திக்கும்

## குறைந்தபட்ச கோரிக்கை பற்றி விளக்குவர்

யாழ்ப்பாணம் வியா. தமிழர் ஒற்றுமை முன்னணி தூதுகோஷ்டி 9 அம்சத்திட்டங்கள்பற்றி பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுடன் விரைவில் பேச்சுவார்த்தை நடத்தவிருக்கிறது.

முன்னாள் யாழ். மேயர் திரு எஸ் நாகராசா தலைமையில் செல்லும் இத்தூதுக்கோஷ்டியில் திருவாளர்கள் எஸ். ஜே. வி. செல்வநாயகம் ஏ. அமிர்தலிங்கம் எம் சிவசிதம்பரம் திரு வி சுந்தரலிங்கம் திரு வி நவரத்தினம் ஆகியோர் செல்வார்கள் எனத்தெரிய வருகிறது.

தமிழ் மக்கள் சார்பில் இத்தூதுகோஷ்டி குறைந்த பட்சக் கோரிக்கைகளான 9 அம்சத்திட்டத்தைப்பற்றி பிரதமரிடம் விளக்கிக் கூறுவார்கள் எனத் தெரிய வருகிறது.

பிரதமரை சந்திப்பதற்கான தேதி இன்னும் நிச்சயிக்கப்படவில்லையென்றும் இம்மாத இறுதியில் அல்லது அடுத்த மாத ஆரம்பத்தில் இச்சந்திப்பு நடைபெறுமென தான் எதிர்பார்ப்பதாக ஒற்றுமை முன்னணி உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

பிரதமரை சந்தித்தபின்னர் தான் ஒற்றுமை முன்னணியின் பிரசாரக் கூட்டங்கள் நடைபெறுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## 'மரமுந்திரிச் செய்கையை துரிதப் படுத்தவேண்டும்'

யாழ்ப்பாணம், வியா பூநகரி பகுதியில் மரமுந்திரிக்கு வழங்கப்பட்ட காணிகள் எவ்வளவு சிக்கிரம் அபிவிருத்தி செய்யப்படுகிறதோ அவ்வளவு தூரம் இந்த நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு பக்கபலமாக அமையும்

யாழ்ப்பாணம் கச்சேரியில் நேற்று நடந்த மரமுந்திரி காணி உரிமையாளர் கூட்டத்தில் காணி அபிவிருத்தி அதிகாரி திரு. கே. பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினார்.

மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜேசாப் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் சுமார் 60 பேர் கலந்து கொண்டனர் திரு. பொன்னம்பலம் மேலும் கூறியதாவது; புநகரிப்பகுதியில் மரமுந்திரிகை செய்கைக்காக 4150 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது. முதல் வருடதிட்டத்தில் 1350 ஏக்கர் கட்டாயமாக திருத்தப்பட வேண்டியது ஆனல் 75 ஏக்கர் மட்டும் தான் திருத்தப்பட்டது பல்வேறு கஷ்டங்களினுல் தான் மிகுதியான நிலங்கள் திருத்தப்படவில்லை எனத் தெரிவித்துள்ளார்கள் அவர்களுக்குள்ள கஷ்டங்களைப் போக்க நடவடிக்கை எடுப்போம்.

இந்நிலங்கள் விரைவில் திருத்தப்பட்டுமரமுந்திரிகை செய்கை இடம் பெறுவதற்கு எல்லாரும் ஒத்துழைக்கவேண்டும். (ஞ.வி.ம)

தகுதிகளுக்கான

## புள்ளி அடிப்படையில் ஆசிரியர்க்கு பதவி உயர்வு!

உடுப்பிட்டி, புதன் பதவி உயர்வு கோரும் ஆசிரியர்களுக்கு அவர்களுடைய தகுதிகளுக்கான புள்ளிகள் கணிக்கப்பட்டு அதன் அடிப்படையிலே தெரிவுசெய்யப்படுவர் இது சம்பந்தமாக நாம் சமர்ப்பித்த திட்டத்தைச் செயற்படுத்த அரசாங்கம் ஒப்புக் கொண்டுள்ளது.

இத்தகவலை ஸ்ரீலங்கா ஜாதிக குருசங்கப் பொதுக் காரியதரிசியும், கல்வியமைச்சு இடமாற்றச்சபை உறுப்பினருமான திரு. எல். ஆரியவன்சா தெரிவித்தார்.

இன்னும் சில மாதங்களில் உப அதிபர்கள் போன்ற பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படவிருப்பதாகவும் அவர் சொன்னர்.

## 9 மாதத்தின் பின் திறக்கப்பட்டது

சென்னை, பெப். 23 கடந்த 9 மாதகாலமாக மூடப்பட்டிருந்த சென்னை ஸ்ரதண்டேட் மோட்டார் தொழிற்சாலையை தமிழ்நாடு தொழில் அமைச்சர் என். வி. நடராஜன் திறந்து வைத்தார்.

கடந்தவாரம் தொழிலாளருக்கும் முதலாளிகளுக்குமிடையே ஏற்பட்ட உடன்பாட்டை அடுத்தே இத்தொழிற்சாலையை அமைச்சர் திறந்துவைத்தார்.

தமிழ் நாட்டில்

## வாக்கு எண்ணுவது 10-ம்திகதி ஆரம்பமாகும்

சென்னை, பெப். 24 தமிழ்நாட்டில் அடுத்த மாதம் முதலாம் திகதியும் 4-ம் திகதியும் 7-ம் திகதி தேர்தல் நடைபெறும்

இந்நாட்கள் ஒவ்வொன்றிலும் 13 லோகசபை தொகுதிகளுக்கும் 78 சட்டசபைத் தொகுதிகளுக்கும் தேர்தல் நடக்கும். வாக்குச்சீட்டு எண்ணுவது 10-ம் திகதி ஆரம்பமாகும்.

இந்திய மன்னர்களின் மான்யங்கள் ஒழிக்கப்படுவதைத் தாம் எதிர்க்கவில்லை என்றும் ஆனல் அவர்களுக்குக் கஷ்டநிவாரணம் அளிக்காமல் விடுவதையே தாம் எதிர்ப்பதாகவும் திரு. காமராஜர் கூறியிருக்கிறார்

## இரத்தினபுரி நீதிமன்றத்தில் 50,000 ரூபாய் மோசடி!

### உத்தியோகத்தர் அங்கொடையில்:

கோட்டை, புதன் இரத்தினபுரி மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தில் நடைபெற்றுள்ளதாகக் கருதப்படும் ஐம்பதினுயிரம் ரூபாய் மோசடியை நீதிஅமைச்சின் பரிசோதனைப் பிரிவைச் சேர்ந்த திரு. எம். செல்வராஜா கண்டுபிடித்துள்ளார்.

இந்தமோசடியில் சம்பந்தப்பட்டதாகக் கருதப்படும் நீதிமன்ற உத்தியோகஸ்தர் ஒருவர் இப்போது அங்கொடைமனநோய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டிருக்கிறார்.

கடந்த மூன்றுமாதங்களில பல்வேறுவழக்குகளிலும் அபராதம் செலுத்தப் பட்டசுமார் ஐம்பதினுயிரம் ரூபாய் கணக்கில் வைக்கப் படவுமில்லை; நீதிமன்ற அலுவலகத்தில் பாதுகாப்பாக வைக்கப்படவுமில்லை; என்ற தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து நீதிஅமைச்சைச் சேர்ந்த திரு. எம். செல்வராஜா இதுசம்பந்தமாக விசாரணை நடத்தினர்.

இரத்தினபுரி நீதிமன்றத்துக்குத் திடீர்விஜயம்செய்த திரு செல்வராஜா குறிப்பிட்ட உத்தியோகஸ்தர் அங்கு காணப்படாமையால் அவரது மேசை, பெட்டிகளை ஆராய்ந்தபோது பணத்திற்குப்பதில் குதிரைப்பந்தயம் சம்பந்தப்பட்ட பத்திரிகைகள், ரசீதுகள் வீட்டுக்குச் சாமான்கள் வாங்கிய ரசீதுகளே காணப்பட்டனவாம்.

இதுசம்பந்தமாகவும் சென்ற ஆகஸ்ட் மாதத்தில் உறுதிகள் சம்பந்தமாக நடைபெற்றதாகக் கருதப்படும் மற்ருெரு மோசடிபற்றியும் இப்போது துப்பறியும் பொலிசார் விசாரணை செய்துவருகின்றனர்.

## சுவீப்முடிவுகள்

(24-2-71) 637-வது சுவீப்

முதலாவது பரிசு
05 G 0332 ரூபா 76,790

இரண்டாவது பரிசு
10 M 0455 ரூபா 30,716

மூன்ருவது பரிசு
11 B 0702 ரூபா 7,679

தலா 383 ரூபா 95 சதம் பெறும் 100 டிக்கட்டுகள் வருமாறு:

21 A 0671
22 B 0782
23 B 0592
17 B 0939
06 c 0012
10 c 0591
22 D 0696
17 D 0586
08 A 0112
17 B 0082
19 B 0983
23 C 0963
09 C 0006
30 D 0096
03 D 0184
19 D 0775
02 E 0426
31 E 0451
28 F 0001
04 H 0624
24 H 0506
18 J 0139
09 K 0029
09 K 0970
21 K 0270
07 M 0697
21 M 0781
11 N 0968
11 N 0545
08 N 0276
25 O 0520
30 O 0350
23 P 0475
25 P 0952
20 Q 0851
29 Q 0952
19 R 0920
25 R 0313
01 R 0201
28 S 0566
07 E 0664
07 E 0838
08 H 0707
04 H 0113
27 J 0319
16 K 05 1
10 K 0556
21 K 0312
19 M 0072
05 M 0037
22 M 0162
28 N 0380
16 N 0619
14 O 0466
30 O 0184
30 P 0040
28 P 0401
21 Q 0855
04 Q 0472
28 R 0024
23 R 0061
13 R 0505
16 R 0970
21 S 0199

(8ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்


### விற்பனைக்கு

ராக்டர் டெயிலர்

நல்ல நிலையிலுள்ள ராக்டரும் டெயிலரும் விற்பனைக்குண்டு. நேரில் வரவும். 74, பழைய பூங்கா வீதி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். 2854

காரைநகர் வடக்கு மல்லிகைக் குறிச்சியில் 6 பரப்பு வீடும், வளவும் கிணற்றுடன் விற்பனைக்குண்டு. M. கனகசபை, ஜெயலட்சுமி மரக்காலை, 56, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 2853

### தேவை

வீடு கட்ட இரண்டு பரப்புக் காணி தேவை. கண்டி ரோட்டில் கச்சேரிக்கும்- அரியாலைக்குமிடையில் நியாயமான விலையில் விண்ணப்பிக்கவும். 216, பிக்கறிங்ஸ் ரோட், கொட்டாஞ்சேனை, கொழும்பு-13. 2465

### விற்பனைக்கு

கல்வியங்காடு புதுசெம்மணி தெரு அருகாமையில் தாளையடியில் 45 பரப்பு நெல்வயல் ரூபா 4500/- (2) கல்வியங்காடு புதுசெம்மணி தெரு அருகாமையில் நெல்வயல் ராமன் பள்ளம், பரப்பு 4, பரப்புக்கு 3 பறை விளையும் காணி. விலைரூபா 2000/-. (3) கல்வியங்காடு புதுசெம்மணிதெரு அருகாமையில் செம்பிரான் வயல் பரப்பு 10. நெல்வயல், பரப்புக்கு 3 பறை விளையும். காணி விலை ரூபா 3000/-. விற்பனைக்குண்டு. விரும்புவோர் டாக்டர் வ. சுப்பிரமணியம், கிருஷ்ண பவனம். பருத்தித்துறைரோட்டு, கல்வியங்காடு, யாழ்ப்பாணம். தொடர்பு கொள்ளவும். 2855

**வியாபாரம்பெருக விளம்பரம் செய்க**


## ஏல விற்பனை

வலி கிழக்குப் பலநோக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜம் நீர்வேலி

எதிர்வரும் 3-3-71 புதன் கிழமை மு. ப. 10-00 மணியளவில் ஷெ சமாஜக் கந்தோரில், கட்டிடத்திற்குப் பாவிக்கக்கூடிய தூண்பெட்டிகள், கல்லு அளக்கும் பெட்டிகள், இறில் கல்லுகள், பனந்தடிகள், பிலித்தரங்கள் முதலியன ஏலத்தில் விற்பனை செய்யப்படும். மேற்படி பொருட்களை கந்தோர் நேரத்தில் பார்வையிடலாம்

க. வீ. கனகசபாபதி
தலைவர்

23-2-71 2792

## சுன்னாகம் பட்டணசபை சோலைவரி

1970-ம் ஆண்டு 4-ம் கந்தாயத்திற்குரிய சோலை வரியை வரி அறவிடுபவரிடம் அல்லது பட்டணசபை அலுவலகத்தில் 2-3-71-ம் திகதி அல்லது அதற்கு முன் செலுத்தத் தவறின் கூடுதலாக 10 வீதம் (பத்து வீதம்) விருந்துப்பணமும் வரிப்பணத்துடன் சேர்த்து அறவிடப்படும் என்பதை சுன்னாகம் பட்டணசபை வரியிறுப்போருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பொ. நாகலிங்கம்
தலைவர்,
பட்டணசபை,
சுன்னாகம்.

பட்டணசபை அலுவலகம்,
சுன்னாகம், 18-2-71

2789

## சிவராத்திரி விழா

தாவடி, புதன் கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயம் கொக்குவில் ஸ்ரீ ஞான பண்டித வித்தியாசாலை என்பனவற்றில் முறையே கதாப்பிரசங்க இன்னிசை வில்லிசை நாடகங்கள் சிவராத்திரி தினத்தன்று இடம் பெற்றன.

தாவடி பத்திரகாளி ஆலயத்திலும் சிவராத்திரி விழா மிகவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

# விவசாயம் கட்டாய பாடம்

கோட்டை, புதன்

எல்லா அரசாங்க பாடசாலைகளிலும் 6-ம், 7-ம், 8-ம் வகுப்புகளில் விவசாயம் கட்டாய பாடமாகப் படிப்பிக்கப்படும். மேற்படி முடிவை அரசாங்கம் எடுத்துள்ளது. அரசாங்கத்தின் முடிவை அமுல் நடாத்த கல்வி அமைச்சு எல்லா பாடசாலைகளிலும் விவசாயக் கல்வித்திட்டத்தைத் தயாரித்து வருகின்றது.

இத்திட்டம் அமுல் நடாத்தப்பட்டபின் செறிவான விவசாயச்செய்முறைபயிற்சி ஒன்றிற்கும் மாணவர்கள் உள்ளாகவேண்டும். 7-ம் அல்லது 8-ம் வகுப்பிலிருந்து விலகும்போது மாணவர்கள் இச்செய்முறைப் பயிற்சியில் சேரவேண்டும்.

அல்லாமலும் நாட்டின் பல பாகங்களிலும் பத்து விவசாய விசேட பயிற்சிப் பாடசாலைகள் நிறுவப்படவுள்ளது. இப்பாடசாலைகளில் நடைமுறையிலுள்ள விவசாய முறைகள் மாணவருக்குப் போதிக்கப்படும். மாணவர்களுக்கு முக்கியமாக விவசாய செயல்முறை அனுபவம் பெறக்கூடியதாக பயிற்சி அமையுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வியாழன் 25—2—71

(செய்திகள்: காலை 6-45 பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

844 மீ. அல்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்,

844 மீ. அல்ட் 49 மீ.

பகல்12-00 தொழிலாளர் கேட்டவை, 1-00 கதம்ப இசை.

844 மீ. அல்ட் 61 மீ.

மாலை 4-30 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 வளரும் பயிர்.

இரவு6-15இசைப்பயிற்சி, 7-15 பாட்டு, 7-45 செய்திச் சுருள், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 நாதசுரம், 10-30 செய்திக் குறிப்பு.


## குமாரசுவாமிப்புலவர் வரலாறு

(கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை B. A.)

இது குமாரசுவாமிப் புலவரது விரிவான சரித்திரமாக அமைந்துள்ளது. இதனைக் கற்பவர்கள் புலவருடைய சரித்திரத்தை அறிவதோடமையாது அவர் காலத்தில் வாழ்ந்த பல்வேறு புலவர்களது சரித்திரக் குறிப்புகளையும் அறியவல்லவராவர். உயர்ந்த கலிக்கோவிற் கட்டப்பட்டுள்ளது

விலை ரூபா 6-50

கிடைக்குமிடம்:

சண்முகநாதன் புஸ்தகசாலை, வண்ணார்பண்ணை.

விஜயலக்குமி புஸ்தகசாலை, 248, காலிவீதி, கொழும்பு.

2788

ராணி சினிமா (யாழ்ப்பாணம்)

தினசரி 3 காட்சிகள்

சிவாஜி கணேஷன் - ஜெயலலிதா நடித்த

**எங்கிருந்தோ வந்தாள்**

# யாழ் வின்ஸர்

தினசரி 4 காட்சிகள்

நடிகர் திலகமும் நாட்டியப் பேரொளியும் சேர்ந்து நடிக்கும் வண்ணக் காவியம்

ஜெமினியின்

# விளையாட்டுப்பிள்ளை

(ஈஸ்மன் கலர்)

மற்றும் நடிகர்கள்

காஞ்சனா, சோ, மனோரமா, பாலையா.

6-வது வாரம்

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)

தினசரி 3 காட்சிகள் போயா நாட்கள் 4 காட்சிகள்

கெப்பிட்டல் (கொழும்பு)

பினாஸா (கொழும்பு)

சிவாஜி

காஞ்சனா

எம். என். நம்பியார்

நாகேஷ்

முத்துராமன்

இன்னும் பலர் நடித்த





# சிவந்த மண்

ஸ்ரீ காலிங்கன்

இணுவில்

தினசரி 6-30, 9-30

போயா நாட்கள் 2-30

ஜெமினி—பத்மினி நடித்த

**எதிர்காலம்**

வெல்லிசினிமா

மானிப்பாய்

தினசரி 2-30, 6-30, 9-30

ஏ.வி.எம் ராஜன்-சாரதா நடித்த

**துலாபாரம்** (தமிழ்)

நாகம்ஸ் சினிமா

சுன்னாகம்

தினசரி 6-30 9-30

போயா நாட்கள் 2-30

சிவாஜி - பத்மினி நடித்த

**திருமால் பெருமை**

ராஜா (யாழ்ப்பாணம்)

தினசரி 3 காட்சிகள்

எம். ஜி. ஆர்-பி. எஸ். சரோஜா நடித்த

**ஜெனோவா** (புதியகொப்பி)

REGAL Jaffna

Daily 4-45, 7& 9-45 p. m.

Poya days 4 shows

Lee Marvin

in

THE KILLERS

(Color)

இப்பொழுது நடைபெறுகிறது

## மனோகரா—யாழ்ப்பாணம்

தினசரி 2-30, 6-30, 9-30.

போயா தினங்களில் நாலு காட்சிகள்



★ காந்தாராவ் ★ தேவிகா

★ பாலையா ★ லலிதா

முதலியோர் நடித்த

# சுகுண சுந்தரி

## தென் ஆபிரிக்காவுக்கு பிரி. ஹெலிகொப்டர் விற்பனை

# கறுப்பர் நாடுகளில் குமுறல்!

## காமன்வெல்த்தில் மீண்டும் நெருக்கடி

## நைஜீரியா எதிர் நடவடிக்கை

லண்டன், பெப். 24

**தென்னாபிரிக்காவுக்கு ஹெலிகொப்டர் விமானங்களை விற்பனை செய்ய பிரிட்டிஷ் அரசாங்கம் முடிவுசெய்திருப்பதை பல ஆபிரிக்க நாடுகள் கண்டித்திருக்கின்றன.**

**இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக இந்துசமுத்திர பாதுகாப்பு சம்பந்தமாக ஆராய காமன்வெல்த் நாடுகள் நியமித்த ஆயவுக் குழுவிலிருந்து நைஜீரியா விலகிக் கொண்டது.**

**இதைத்தொடர்ந்து வேறுபல நாடுகளும் இந்த ஆய்வுக்குழுவிலிருந்து விலகிக்கொள்ளக்கூடும்என்று எதிர்பார்க்கப்படுகின்றது.**

நீர்மூழ்கிக் கப்பல்களைத் தகர்ப்பதற்கான வசதிகள் கொண்ட ஹெலிகொப்டர் விமானங்களை தென்னாபிரிக்காவுக்கு விற்பதற்கு பிரிட்டன் உதவி செய்திருக்கின்றது இருநாடுகளுக்குமிடையிலுள்ள ஓர் உடன்படிக்கையின்படி இந்த ராணுவ விமானங்களை பிரிட்டன் தென்னாபிரிக்காவுக்கு விற்கவிருக்கின்றது.

பிரிட்டன் செய்துள்ள இந்த முடிவை பல ஆபிரிக்க நாடுகள் கண்டித்திருக்கின்றன. முதல் கட்டமாக காமன்வெல்த் ஆய்வுக்குழுவிலிருந்து நைஜீரியாவிலகிக் கொண்டிருக்கின்றது.

சிங்கப்பூரில் இடம்பெற்ற காமன்வெல்த் மாநாட்டில் இந்து சமுத்திரத்தின் பாதுகாப்பு சம்பந்தமாக ஆராய்வதற்கென நியமிக்கப்பட்ட 8 நாடுகள் குழுவிலிருந்து நைஜீரியா விலகிக் கொண்டுவிட்டது. இந்தக் குழுவிலிருந்து நைஜீரியா விலகிக் கொள்ளும் முடிவை அதிபர் கோவான் லேகோஸில் அறிவித்தார். தென்னாபிரிக்காவுக்கு ஆயுதம் வழங்குவது பற்றி முடிவெடுக்கும் உரிமை பிரிட்டனுக்கிருக்குமானால் வேறுவிதமான முடிவுகளை எடுக்கும் உரிமைஎங்களுக்கும் உண்டு என்று அதிபர் கோவான் கூறினார். இது முதல நடவடிக்கைதான் என்றும் வேறு நடவடிக்கைகள் தொடரும் என்றும் அவர்சொன்னார்.

பிரிட்டன்ஹெலிகொப்டர்களை வழங்க முடிவுசெய்த பின்னர் இந்தக்குழு இயங்குவது அர்த்தமற்றது, வெறும் கேலிக்கூத்து என்று சாம்பியா பிரதிநிதி கருத்து வெளியிட்டிருக்கிறார்.

மலேஷியாவும் இந்தக்குழுவிலிருந்துவிலகிக் கொள்ளக் கூடும்என்று தெரிகின்றது. மற்றநாடுகளும் விலகுவதாய் இருந்தால் மலேஷியாவும் விலகிக் கொள்ளும் என்றுஅறிவித்திருக்கின்றது

எத்தியோப்பியாவும் கண்டித்திருக்கின்றது. தென்னாபிரிக்காவுக்கு ஆயுதம் விற்பதைத் தடைசெய்து ஐ.நா. நிறைவேற்றியுள்ள தீர்மானத்தை அப்பட்டமாக மீறுவதாகும் பிரிட்டனின் இந்த முடிவுவென்று எத்தியோப்பியா கண்டித்திருக்கிறது.

முற்போக்கு ஆபிரிக்கநாடுகளுக்கு எதிரான சதிமுயற்யில் பிரிட்டன் இறங்கியிருப்பதாக சோவியத் பத்திரிகையான இஸ்வெஸ்தியா கண்டித்திருக்கின்றது.

இந்துசமுத்திரத்தில்சோவியத்போர்க் கப்பல்களின் நடமாட்டம் அதிகரித்திருப்பதாகவும் இதனால் இப்பிரதேசம் அபாயத்துக்குள்ளாகியிருப்பதாகவும் பிரிட்டன் தெரிவித்துவந்துள்ளது. இந்தப் போர்வையின் கீழேயே தென்னாபிரிக்காவுக்கும் பிரிட்டன் ஆயுதம் விற்க முன்வந்திருக்கின்றது.

## இஸ்ரேல் விஞ்ஞானிகள் சாதனை

டெல் அவிவ், பெப். 24

கடல்நீரை சுத்திகரிக்கும் புதிய முறையொன்றை இஸ்ரேலிய விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இதனால் இஸ்ரேல் நாட்டின் தண்ணீர்ப் பஞ்சம் பெருமளவில் தீர்ந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. உப்புநீரை சுவையுள்ள குடிநீராக மாற்றும் இந்தப்புதியமுறையில் செலவும் வெகு குறைவாகவே இருக்குமாம். ஒரு கனமீட்டர் உப்புநீரை குடிநீராக்குவதற்கு ஒரு ரூபாய் செலவாகுமாம்

## சங்கராசாரியார் வேண்டுகோள்

சென்னை, பெப், 24

தம்முடைய பெயரையும் எழுத்துக்களையும் பயன்படுத்த வேண்டாமென்று காஞ்சி காமகோடி சங்கராச்சாரிய சுவாமிகள் தமிழ்நாடு அரசியல்வாதிகளை கேட்டிருக்கிறார்.

— —

## ஆயுதக்குறைப்பு மாநாடு

ஜெனிவா, பெப். 24

ஆயுதக்குறைப்பு மாநாடு மீண்டும் ஜெனிவாவில் ஆரம்பமாகியுள்ளது, பல மாதங்களுக்குப் பின்னர் இந்த மாநாடு நடைபெறுகின்றது.

ஐ. நா. பொதுச் செயலாளர் யுதான்ட். அமெரிக்க அதிபர் திரு நிக்ஸன் ஆகியவர்கள் மாநாட்டுக்குசெய்திகள் அனுப்பியிருக்கிறார்கள்.

——

## இடமாற்றம்

தாவடி, புதன்

இலங்கைச் சிறுகைத் தொழில் இலாகாவைச் சேர்ந்த நெசவு ஆசிரியைகளான திருமதி செல்வநாயகி சண்முகலிங்கம் மட்டக்களப்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கும் மன்னாரில் கடமையாற்றிய செல்வி சிவக்கொழுந்து முள்ளியான் நெசவுநிலையத்துக்கும் முள்ளியானில் கடமைபுரிந்த திருமதிஎம். பூரணம் மன்னாருக்கும் இடமாற்றலாகிச்சென்றுள்ளனர்.

## வட வியட்னும் மீது யு.எஸ். மீண்டும் குண்டுவீச்சு

### யுதாண்ட் கவலை

வாஷிங்டன், பெப். 24

வடக்கு வியட்னும் மீது மீண்டும் அமெரிக்க விமானங்கள் குண்டு வீசித்தாக்கத்தொடங்கியிருப்பது குறித்து ஐ. நா. பொதுச் செயலாளர் யுதாண்ட்கவலை தெரிவித்திருக்கிறார்.

இந்தோசினுவில் இது இன்னுமொரு கவலைதரும் விஷயம் என்று அவர் கூறியிருக்கிறார்.

அமெரிக்க விமானங்கள் மீது வடவியட்னுமியர் விமான எதிர்ப்பு ஏவுகணைகளைத் தொடுத்துவருவதை நிறுத்தும் வரைக்கும் வடவியட்னுமியரின் ஏவுகணைத் தளங்கள்மீது அமெரிக்க விமானங்கள் தொடர்ந்து குண்டு வீசலை செய்யும் என்று அமெரிக்கபாதுகாப்பு அமைச்சர் கூறியிருக்கிறார்.

அடுத்தவாரத்துக்குள் இப்பகுதியில் பெரும் சண்டையொன்று மூளக்கூடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்,

லாவோசுக்குள் புகுந்துள்ள தென் வியட்னும் படைகள் சிதறடிக்கப்பட்டுவிட்டதாகக் கூறப்படுவதை உத்தியோக வட்டாரங்கள் மறுத்துள்ளன.

ராணுவ சூன்யப் பிரதேசத்திலிருந்து சுமார் 200 கிலோமீட்டர் தொலைவில் அமெரிக்க விமானங்கள் வடவியட்னுமுக்குள் குண்டு வீசியதாகக்கூறப்பட்டது.

......

## புதிய தலைவர்

பாண்டிருப்பு. புதன்

அகில இலங்கை தமிழரசுக் கட்சியைத் சேர்ந்த ஆசிரியர் போ. பூ செல்லத்துரை பழுகாமம் கிராமசபையின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இந்தியா - மே. இந்தியா முதல் டெஸ்ட்

## வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்தது

கிங்ஸ்ரன், பெப். 24

மேற்கிந்தியக் கிரிக்கெட் கோஷ்டிக்கும் இந்தியக் கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையில் ஜமேக்காவில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் கிரிக்கெட்போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியக் கோஷ்டி தனது முதல் இன்னிங்ஸில் மொத்தம் 387 ஓட்டங்களைப் பெற்றது. இதில் வீரர் சர்தேசாய் 212 ஓட்டங்களைப் பெற்று ஒரு சாதனையை ஏற்படுத்தினர்.

மேற்கிந்திய கோஷ்டி தனது முதல் இன்னிங்ஸில் மொத்தம் 217 ஓட்டங்களைப் பெற்றதுஇக்கோஷ்டி தனது 2-வது இன்னிங்ஸில் 5 விக்கெட் நஷ்டத்துக்கு 384 ஓட்டங்களைமிக வேகமாகப் பெற்றது. இதில் வீரர் ரோகன் கன்ஹாய் ஆட்டமிழக்காது 157 ஓட்டங்களை பெற்றிருந்தார்.

மேற்படி இரு கோஷ்டிகளுக்கு மிடையில் நடைபெற்ற இந்த முதலாவது டெஸ்ட் போட்டி சிறப்புற்று விளங்க முடியாத அளவுக்கு மழை அடிக்கடி குறுக்கிட்ட வண்ணம் இருந்தது.

இப் போட்டியில் இந்தியக் கோஷ்டியின் வீரர் விஸ்வநாத்தின் முழங்காலில் காயம் ஏற்பட்டதினுல் 2-வது டெஸ்ட் போட்டியில் இவர் கலந்து கொள்வது பற்றி இன்னும் முடிவு தெரியவில்லை

விஸ்வநாதன்இப்பொழுது சிகிச்சைக்காக ட்ரினிடாட் சென்றுள்ளார். இந்திய கோஷ்டி அங்குவரும்போது ஞாயிறன்று அவர்களுடன் விஸ்வநாதன் சேர்ந்து கொள்வார்.

— —

சுழிபுரம் கி. ச:

## வாக்காளர் பார்வைக்கு ஒரு கடிதம்

சுழிபுரம், புதன்

சுழிபுரம் கிராமசபைத் தலைவர் திரு.சு. சுந்தசுவாமிக்கு ஒரு அனுமதேயக் கடிதம் கிடைத்துள்ளதாம். அனுமதி பெருத பல விடயங்கள் கிராம சபைப்பகுதியில் நடைபெறுகின்றன. என்றும் இவற்றை உடன் தடுக்க வேண்டும் என்றும் இல்லாதபட்சத்தில் உயிருக்கேஆபத்துஏற்படும்என்றும் அக்கடிதத்தில் எச்சரிக்கப்பட்டுள்ளது வாக்காளரின் பார்வைக்காக இக்கடிதம் கிராமசபையில் வைக்கப்பட்டுள்ளது.

— —

## நியமனம்

நெடுங்கேணி, புதன்

வவனியா வடக்கு பிரிவுக் காரியாதிகாரியாக கடமையாற்றிய திரு. ஜெ.செந்தில்நாதன்கமத்தொழில்சேவை உதவி ஆணையாளராக நியமனம் பெற்று மன்னார் மாவட்டத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். அவருடைய ஐந்து வருடகாலசேவையைப் பாராட்டி நெடுங்கேணி அரசாங்க உத்தியோகத்தர்களால் ஒரு பாராட்டு வைபவம் நடத்தப்பட்டது.

### 6 உள்ளூராட்சி மன்றத் தலைவர்களின் கோரிக்கை

சுழிபுரம், புதன்

சுழிபுரம்வட்டுக்கோட்டை அராலி மானிப்பாய் கிராமசபை மானிப்பாய் சங்கானை பட்டின சபை ஆகிய உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் தத்தமது பகுதிக்கு ஆரம்பகூட்டுறவு சங்கங்களை நிறுவித் தரும்படி கூட்டுறவு ஆணையாளரையும் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் கோரியுள்ளனர்,

வட்டுக்கோட்டைத் தொகுதி, உடுவில் தொகுதி ஆகியவற்றின் இரு ஆட்சி மன்ற பிரதிநிதிகளையும் கொண்டு அமைச்சர்வரை செய்வதற்கு ஓர்குழுதெரிவு செய்யப்பட்டுள்ளது. எமக்குத் தனிமையானகூட்டுறவு இயக்கம் வேண்டும் எமது பகுதியின் தேவைகளை நாமே நிறைவேற்றுவோம். ஏனைய பகுதிகளிலுள்ளது போல் எம்மிடமும் சகல பலமும் உண்டு என்பதை தெரியப்படுத்திய ஓர் மகஜர் மேலதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது குழுவின் தலைவராக திரு சு. சுந்தசுவாமி தெரியப்பட்டுள்ளார்.

——

புங்குடுதீவு கி. ச.

## தேர்தல் வழக்கு தள்ளுபடி

கோட்டை, புதன்

1968-ம் ஆண்டுமேமாதம் நடைபெற்ற புங்குடுதீவு கிராமசபைத் தேர்தலில் 3 - ம்வட்டாரத்தில் வெற்றிபெற் திரு. எஸ். திருநாவுக்கரசுவின் அங்கத்தவர் பதவியை தடைசெய்ய வேண்டும் என்றும் தேர்தல் வாக்குகளைத்திரும்ப எண்ண வேண்டும் என்றும் கோரி இதேவட்டாரத்தில்போட்டியிட்டு தோல்வியடைந்த வி. கே. சோமசுந்தரம் என்பவரால் கொழும்பு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு தள்ளுபடி செய்யட்டது.

இம்மனு மீதான விசாரணையின் போது இருதரப்பிலும் எவரும் ஆஜராகாததால் நீதியரசர் எச். என். ஜி பெர்ணண்டோ நீதியரசர் ஜி. பி ஏ. சில்வா ஆகியோர் மனுவைத் தள்ளுபடிசெய்தனர்.

தேர்தல் அதிகாரியான திரு சுந்தசாமிமீது சமன்ஸ் பிறப்பித்துத் தடும்படியும் தமக்குரிய வாக்குகள் திரு. திருநாவுக்கரசுவின் வாக்குகளுடன் சேர்த்து எண்ணப்பட்டது என்றும் மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

— —

## பதவி உயர்வு

தாவடி, புதன்

வடபெரும்பாகத் தபால் அத்தியட்சர் கந்தோரில் பிரதமலிகிதராகக் கடமையாற்றிய திரு. சி லோகநாதன் தபால் பகுதிக்குப் பரிசோதகராகப் பதவி உயர்வு பெற்றுக்கொழும்பு சென்றுள்ளார் தற்போது. திரு சிவபுரந்தரசன் பிரதம லிகிதராகக் கடமையாற்றி வருகிறார்.

**மணிவாசகு**

சில மலர்கள் கண்ணைக் கவரும் வண்ணங்கள் கொண்டவை; ஆனால் அவற்றில் மணம் இருக்காது. சொல்வது போல் நடக்காதவனுடைய சொற்களும் இம்மலர்களைப் போல் நவையே கேட்பதற்கு இனிமையாக இருக்கும்: ஆனால் பயன் இருக்காது.

—புத்தர்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams; ''EELANADU'' Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் மாசி மாதம் 13ந் திகதி (25-2-71)


## தமிழ்ப் பாடசாலைகள்

வவுனியாப் பகுதியில் உள்ள சில தமிழ்ப் பாடசாலைகள், ஆசிரியர்கள் இல்லாத காரணத்தால் இயங்காமலிருப்பதாகவும் இப்பாடசாலைகள் மூடப்படும் நிலையிலிருப்பதாகவும் 'ஈழநாடு' செய்தி வெளியிட்டிருந்தது. இப் பாடசாலைகளிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்குப் பதிலாக வேறு ஆசிரியர்கள் நியமிக்கப்படாததுதான் பாடசாலைகள் இயங்க முடியாமலிருப்பதற்கு காரணம் எனக் கூறப்பட்டது. ஆனால் இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களின் இடத்துக்கு நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் தமது கடமையை ஏற்கவராமல் லீவில் நிற்பதுதான் இந்த அவலநிலைக்குக் காரணமென்றும் இந்த ஆசிரியர்கள் தமது பொறுப்பை நிறைவேற்ற வேண்டுமென்றும் வவுனியா கல்வி அதிகாரி விளக்கம் கொடுத்திருந்தார். இதேசமயம் தோட்டப்பகுதிகளிலும் தென்னிலங்கையிலும் தமிழ் ஆசிரியர்கள் இல்லாத காரணத்தால் பல பாடசாலைகள் மூடப்பட்டு வருவதாகவும் பல பாடசாலைகளிலுள்ள தமிழ் வகுப்புகள் மூடப்பட்டுவிட்டதாகவும் செய்திகள் கிடைத்துள்ளன.

தமிழ் ஆசிரியர்களே தமிழ்ப்பிள்ளைகளின் கல்வியில் அக்கறை செலுத்தாமல் தமது சொந்தநலனையே பெரிதாகக் கருதினால் தமிழ் இந்த நாட்டில் எப்படி வாழமுடியும்!

இந்த நாட்டின் எந்தப் பகுதியில் தமிழ்ப் பிள்ளைகள் வாழ்ந்தாலும் அவர்களுக்குத் தாய்மொழி மூலம் கல்வி போதிக்கப்படவேண்டுமென்றும் தமிழ்மொழியில் படித்தவர்கள் அந்த மொழியிலேயே அரசாங்கசேவைப் பரீட்சைகளுக்குத் தோற்ற வேண்டுமென்றும் தமிழ் மக்கள் கோரிவருகின்றனர். அரசாங்கத்துடன் தமிழ் மக்கள் தமது சொந்த மொழியிலேயே தொடர்பு கொள்ள உரிமை இருக்க வேண்டுமென்றும் தமிழ் மொழிக்கு சமஉரிமை இருக்கவேண்டுமென்றும் கோருகின்றார்கள். தமிழ் மொழியை அரசாங்கம் புறக்கணிக்கிறதென்றும் தமிழர் குற்றஞ்சாட்டுகின்றார்கள்.

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வாழும் தமிழ்ப் பிள்ளைகளுக்குத் தமிழ்மொழி மூலம் கல்வி கற்கும் வாய்ப்பிருந்தும் தமிழ் ஆசிரியர்கள் இல்லாத காரணத்தால் அங்கு தமிழ்ப் பாடசாலைகளும் தமிழ்வகுப்புக்களும் மூடப்படுகின்றன. வடக்கு மாகாணத்தில் வவுனியாப் பகுதியிலேயே தமிழ்ப் ஆசிரியர்கள் இல்லாத காரணத்தினால் தமிழ்ப் பாடசாலைகள் மூடப்படுகின்றன.

இப்படியொரு நிலை ஏற்பட யார் காரணம்? புதிதாகத் தமிழ் ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படவில்லையென்றும் இதற்கு அரசாங்கமே பொறுப்பு என்றும் குற்றம்சொல்லலாம். ஆனால் தமிழ் ஆசிரியர்கள் இருந்தும் அவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டதும் லீவு எடுத்துக்கொண்டு தங்கள் இடமாற்றத்தை ரத்துச்செய்து தங்கள் சொந்த இடங்களிலேயே தங்கிவிடுவதற்கு முயற்சிசெய்கிறார்களென்றால் இந்த நாட்டில் தமிழ் அழிவதற்குத் தமிழ் ஆசிரியர்கள்தான் காரணமாக இருந்தார்களென்ற பழி தானேற்படும்.

வெளியிடங்களுக்குச் செல்லவிரும்பாத தமிழ் ஆசிரியர்களுக்கு — அவர்களின் இடமாற்றத்தை ரத்துச்செய்வதில் — உதவி புரியும் அரசியல்வாதிகளும் இந்தப் பழியில் பங்கு கொண்டவர்களாவார்கள்.

''நன்றும் தீதும் பிறர் தரவாரா'' என்கிறது புறநானூறு. தமிழ்மொழியின் வாழ்வும் வளமும், தமிழ் ஆசிரியர்களிடம பெரிதும் தங்கியிருக்கிறதென்பதை புறநானூறு படித்தறிந்த தமிழ் ஆசிரியர்களுக்குத் தெரியாமலிருக்க முடியாது.

## 'வர்த்தக மாணவர்களுக்கு மனச்சோர்வு வேண்டாம்!'

கோட்டை, புதன்

''வர்த்தகக் கல்வி பெறுபவர்கள் உடனடியாக வேலை வாய்ப்புப் பெறக்கூடியவராவர். கிராமசபைகளிலும், நகரசபைகளிலும், பட்டினசபைகளிலும், நீதி ஸ்தலங்களிலும் சுருக்கெழுத்தாளர் தட்டெழுத்தாளர் அதிகமாகத் தேவைப்படுவர். இச்சந்தர்ப்பத்தில் வர்த்தகக் கல்வி பயிலும் மாணவர்கள் மனச்சோர்வு அடையத் தேவையில்லை''

மேற்கண்டவாறு கொழும்பு விவேகானந்த மகாவித்தியாலய வர்த்தக மாணவர் மன்றத்தில் சொற்பொழிவாற்றிய வர்த்தக மாவட்ட வித்தியாதிகாரி திரு வே. அழகேசன் கூறினார்

இக்கூட்டத்திற்கு வித்தியாலய அதிபர் திரு வ நடராசா தலைமைவகித்தார்

திரு. அழகேசன் தமது உரையில் மேலும் கூறியதாவது: ''வர்த்தக மாணவர் மன்றம் உள்ள மகாவித்தியாலயங்களுள் இது மூன்றாவதாக இருப்பதையிட்டும், எனது மாணவர்களே இங்கு வர்த்தக ஆசிரியர்களாகச் சிறந்த முறையில் கடமையாற்றுவதையிட்டும் பெருமையடைகின்றேன். சுருக்கெழுத்து, தட்டெழுத்துப் பாடத்திற்குப் பதிலாகச் சில மாணவர்கள் புவியியல் பாடம் எடுப்பதால் பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி பெற வாய்ப்புண்டு. வித்தியோதய பல்கலைக்கழகத்தில் வியாபார நிர்வாகத்துறைப் பட்டதாரியாகவும், இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பி கொம் பட்டதாரியாகவும் இவ்வித்தியாலய மாணவர்கள் கூடிய விரைவில் வருவார்கள் என்பதற்குரிய அறிகுறிகள் தெரிகின்றன. இலங்கை அரசாங்க விகிதர் சேவையிலும் வர்த்தக பாடங்களில் திறமையும் அதி திறமையுடனும் சித்தியடைந்தால் வேலைவாய்ப்புக்கு இடமுண்டு.''

வர்த்தக மாணவ மன்றத் தலைவர் செல்வன் சு. முருகன், மாவட்ட வர்த்தக வித்தியாதிகாரியை வரவேற்றுப் பேசினார். மன்றச் செயலாளர் செல்வன் ஆ. சங்கரலிங்கம் நன்றியுரை கூறினார்.

# 'இந்திய பழைய தர்ம மார்க்கங்கள் ஒருங்கிணைந்த திரட்சி'

— சுவாமி சர்வாதீத்தானந்தா —

**பகவான் ஸ்ரீ பரமஹம்ஸரின் 13ம்வது ஜனன தினம் இம்மாதம் 27ம் திகதி கதிர்காமம் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தில் கொண்டாடப்படவிருப்பதையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.**

''தன் தேகத்தை மண்ணாலும், அழுக்காலும் விகாரப்படுத்திக் கொள்வது குழந்தையின் இயல்பு. ஆனால் பெற்றோர் அதற்கு இடம் கொடுப்பதில்லை'' இப் பொய்யுலகில், பல போகங்களிலும் மூழ்கி ஒருவன் வாழ்ந்து கெட்டுப் போயிருந்தாலும் இறைவன் அவன் தூய்மையடைந்து வாழ்வதற்குரிய சாதனங்களையும் ஏற்படுத்தியிருக்கிறான்.

இது அகில உலகும் துதிக்கும் அவதார புருடர் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணப் பெருந்தகையின் அருள்மொழி, புனிதமொழி, நம்பிக்கையூட்டும் பொன்மொழி. இளமை முதற்கொண்டே இறைவனைக் காணவேண்டுமெனத் துடியாய்த் துடித்து, அவனைக் கண்டே ஆனந்தித்துப் பெரும்பேறுபெற்ற புண்ணியனின் தூய்மையான தேன்மொழி. வறுமையென்னும் பிடியிற் கட்டுண்டும் பொறுமையே கைக்கொண்டு தளராது மற்றொருவரின் துணையின்றித் தாமே அரும்பாடுபட்டு அன்னை பராசக்தியின் தரிசனத்தையடையப் பெற்றார் இப்பரமஹம்ஸர். குழந்தையிலேயே பேரறிவுடைய பெரியோர்களினது செயல்களிலும் அப்பாற்பட்ட செயல்களிலிறங்கிய பகவான் பரமஹம்ஸர் பள்ளிப் படிப்பிற் கசப்புடையவராகக் காணப்பட்டாராயினும் ஆடல், பாடல்களிலும் பண்பான உபந்நியாசங்கள் புரிவதிலும் குன்றியவரல்லர். விளையாட்டுகளெல்லாம் விபரீதமான தன்மையாகவே ஓடிக்கொண்டிருந்தது. தம்வயதொத்த மற்றைய சிறுவர்களுடன் சேர்ந்து விளையாடவும் நாட்டங்கொண்டிலர், இளமையில் அதிகமாக ஏகநாயகனாய் விளங்கிய இவர் தம் வாழ்வின் வேதநாயகனையே தரிசனம் செய்யும் பெரும் பேற்றையே பெற்றுக்கொண்டார்.

குழந்தை வயதிலேயே தேவ வழிபாட்டில் உயர் நிலையை அடைந்தார் என்பதை அவரின் பூசனை முறையே சான்றுபகரும். களிமண்ணினால் தான் உருவாக்கிய விக்கிரகத்தின் முன் இருந்துகொண்டு பூசனை செய்கையில் தன்னையே மறந்து, உடலம் சோர்ந்து, மெவியர்த்து, நெக்கு நெக்குருகி விம்மி விம்மி அழுவார். அடுத்தகணம் உளம் பூரித்து ஆனந்திப்பார். அருட்கடலாகிய அன்னையின் அனுக்கிரகம்பெற்று, தேனுண்டு களித்த வண்டுபோலத் தானுமாவார்.

''மனமும் வாக்கும் ஒன்றுபட்டுச் செய்யப்படும் பிரார்த்தனைக்கு இறைவன் வசப்பட்டு அருள்புரிகிறான். வாயினால் மட்டும் 'பிரபுவே, இவையாவும் உம்முடையனவே' என்று சொல்லி மனதில் அவை யாவும் தனக்கே உரியன என்று நினைக்கும் ஒருவன் வெய்யும் பிரார்த்தனைகளால் யாதொரு பயனும் அடைய முடியாது''

''பெரிய மீன் பிடிக்க வேண்டும் என்று ஆசைப்படும் செம்படவன், தூண்டிலைத் தண்ணீரில் வீசிவிட்டுப் பொறுமையாகக் காத்திருப்பது போலப்பக்தனும் வெகு பொறுமையோடு கடவுளிடம் பக்திசெலுத்தி வருவானாகில், முடிவில் அவன் கடவுளைக் காண்பதில் சிறிதும்ஐயமில்லை.

குருதேவராம் பரமஹம்ஸ பிதாவின் திவ்விய திருவாக்குகளே இவை.

அருள் ஞானகுருவாய் விளங்கிய ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் இல்வாழ்வையும் அநுபவித்தே கழித்தார். தூய அன்னை சாரதா தேவியாரைத் துணைவியாகத் தமது சித்தப்படியே தெரிவு செய்தார் மாசற்ற மனையாளைத் தன் தாமபத்தினியாகவும், அருமைத் தாயாராகவும் உடன் பிறந்த சகோதரியாகவும் வழிபாடுசெய்யும் தேவியாகவுமே நேசித்தார். ஆனால் நம்மவர் நடத்தும் குடும்ப வாழ்க்கைபோல் நடத்தினாரல்லர். தெய்வமணங்கமழும் வாழ்க்கையையே கொண்டார். கற்பிற்கணிகலமாய் பொற்பாவை அன்னை சாரதாவும், அவர் குறிப்பறிந்து நடக்கும் கோதிலாக் குலமகளாகவே அவர் பக்கலிலிருந்து பணியாற்றினார் இல்லறத்தை நல்லறமாக நடத்தக் கைக்கொள்ளவேண்டிய வழிகளை வகுத்துக்கொடுத்ததுடன் துறவறத்தையும் அதனாலான பேற்றையும் விளக்கிக்கொடுத்தார்.

குருதேவரின் மனங்கவர் சீடராகப் பலபேர் இடம் பெற்றனர். அவர்களுள் முதன்மையானவர், கடவுள் வேட்கை கொண்டு அல்லும் பகலும் அவதிப்பட்டு ஒடித்திரிந்து பூரண விடைகண்ட மாவீரர் சுவாமி விவேகானந்தர் ஆவர். விவேகானந்தரின் தெய்வதாகத்தை நிறைவேற்றியவர் நம் குருதேவராம் ஸ்ரீராமகிருஷ்ணரே.

ஸ்ரீராமகிருஷ்ணர் உயர்ந்த தெய்வத்தன்மை வாய்ந்த மகாபுருஷர். உலகில் தோன்றியுள்ள பெரும் சமய நெறிகளை நிலைநாட்டிய தெய்வத்தன்மை வாய்ந்த பெரியார்களது இயல்புகள் அனைத்தையும்ஒருங்கே கொண்டு தோன்றியுள்ள புருஷர் என்பது இவர் வாழ்க்கையிலிருந்து அறியலாம்.

''இந்தியாவில் தோன்றிய பழைய தர்ம மார்க்கங்கள் அனைத்தும் திரண்டு ஒரு வடிவாகியவரே இவர் என சுவாமி விவேகானந்தா தமது குருவைப்பற்றிக் கூறியிருக்கிறார்.

அருளுருவான பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் பெருமை எங்கணும் பரவிக்கொண்டே வந்தது விரிந்த மலரைத்தேடி வண்டினங்கள் வருவதைப்போல இவரை நாடிப் பல பக்தர்களும் புனிதர்களும் வந்து கொண்டிருந்தார்கள்.

ஆண், பெண், சிறியோர், பெரியோர், கல்வியுடையோர் அல்லாதவர் என்ற பேதம் பாராட்டாது எவ்வகைப்பட்ட மக்களும் ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்சரிடம் கூடி மகிழ்ந்து களித்தனர். அம்மக்களிடம் அவருக்கிருந்த அன்போ அளவிறந்தது. சாதிசமய பேதங்களை அவர் பாராட்டாமல் அனைவருக்கும் நல்லுபதேசங்களும் நல்லாசியுமளித்து முகமலர்வுடன் அன்புசெலுத்தி உபசரித்தார்.

இன்று நம் குருதேவர் நம்சமுகத்தில் இல்லை. ஆனாலும் அவரது உபதேசங்களும் பொன்மொழிகளும், தேவவாக்குகளாகும் பல்கிப் பெருகி உலாவுவதை அறிகிறோம். அவ்வமுதமான அருள்மொழிகளை வாசித்தறிந்துவிட்டால் மாத்திரம் போதுமென்றதிருப்தியுடன் நில்லாது அவரதுகொள்கைகளையும் அமுதமனைய அறிவுரைகளையும் நம்மனதில் நிலைக்கச் செய்து அப்பகவான் சென்ற சன்மார்க்க நெறியில் ஓர் இம்மியளவேனும் பயின்று இயன்றளவு கடைத்தேற நாமனைவரும் முயல்வோமாக.

## 'இடமாற்றத்தை ரத்துச்செய்க'

யாழ்ப்பாணம், வியா.

அண்மையில் யாழ் மத்திய கல்லூரி அதிபர் திரு சபாலிங்கத்துக்குக் கிடைத்துள்ள இடமாற்ற உத்தரவைக் கல்லூரியின் வளர்ச்சி கருதி ரத்துச்செய்ய வேண்டுமென கல்வியமைச்சைக் கோரும் தீர்மானம் நேற்று முன்தினம் நடைபெற்றயாழ் இளைஞர்கழகக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

திரு. க பரமானந்தம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கலைக்கப்பட்ட பாடசாலைகளின் மக்கள் குழுவினால் செய்யப்பட்ட மாணவர் பிரவேசங்கள் அனைத்தையும் அகில இலங்கையிலும் பரிசீலிப்பதற்கு அரசாங்கம் ஒரு விசாரணைக்குழுவை நியமிக்க வேண்டும் என்ற தீர்மானமும் நிறைவேறியது.

கூட்ட ஆரம்பத்தில் யாழ் மத்திய கல்லூரி முன்னாள் அதிபர் திரு தம்பரின் மறைவுக்கு அனுதாபம்தெரிவிக்கப்பட்டது.

## விரைவில் சமர்ப்பிப்பார்

கோட்டை, புதன்

கட்டிட வீடமைப்பு அமைச்சர் திரு. பீட்டர் கெனமன் வாடகைக் குடியிருப்பாளர்களுக்கு பாதுகாப்பளிக்கும் சட்டமூலத்தை விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவிருக்கின்றார். தேர்தல்காலத்தில் கொடுக்கப்பட்ட வாக்குறுதியின் ஓர் அம்சமான மேற்படி மசோதா பாராளுமன்றத்தில் விரைவில் சமர்ப்பிக்கப்பட இருப்பதாகத் திரு. பீட்டர் கெனமன் இன்று தெரிவித்தார்.

## விரைவில் பெற்று

வடபகுதி வித்

உடுவில்,
''உடுவில் கிராமச
பகுதியில் எட்டுப்பாட
கள் இருந்தும் ஒரு
சாலை கூட மகாவித்தி
யமாக இல்லாமல்
பது கவலைக்குரியது.
பாடசாலை மகாவித்
லயமாக்கக்கூடிய பின்
தொகை இருந்தபோ
இடவசதி மற்றும்
சாலை வசதிகள் இல்
பால் இது தரமுயர
படவில்லை. பெற்றே
ஏனையவர்களும் ஒத்து
தால் மிகவிரைவில்
பாடசாலையை மகா
யாலயமாக்க நடவடி
எடுப்பேன்''
இணுவில் சைவம
வித்தியாசாலை பெ
ஆசிரியர் சங்க ஆண்டு
வில் பிரதம விருந்தின
கலந்துகொண்டு உரை
றிய வடபகுதி கல்வி
திரு டபிள்யூ டி சி
தில மேற்கண்டவாறு
னார்.
கல்வியதிபதி திரு
தில உடுவில் கிராம
அக்கிராசனர் திரு சி.
லிங்கம் முதலை உ
னர் திரு ந நீதிராசா
தம கல்வி அதிகாரி
திரசேகரம்பிள்ளை
வாதி திரு சதாசிற்னி
ஆகியோர் இணுவில்
சாமிகோவில் வா
இருந்து ஆரம் தில்
மண்டபத்துக்கு ஊ
மாக அழைத்துவர
டனர்.
மேற்படி வித்தியா
வளவில் கல்வியதிபதி
சி மகதந்தில விஞ்
ஆய்வுகூடத்திற்கான

## 'சோஷ ஆசிரிய

யாழ்ப்பாணம், விய
'ஆசிரியர்களின் பி
களைப் பார்க்கும் போ
மாற்றம்தான் பாரிய
னையாகவுள்ளது. ஆசி
ளுடைய சம்பளம்
வானதால் அவர்க
வசிப்பிடத்திற்கு
லேயே கடமையாற்ற
மதிக்கவேண்டும். இ
ஆசிரியர்கள் தமது
வரத்துச்செலவை
பத்துதலாம். இடம
பிரச்சினையை மனித
னத்துடன் அணுகுவ
பாடசாலை வளர்ச்சி
அக்கறைசெலுத்தவே
எமது சங்கத்தில் எத்
குறுகிய நோக்கமும்
யாது.
இவ்வாறு ஸ்ரீலங்கா
குருசங்க வட பிர
சபையின் விசேட
கூட்டத்தில் பேசு
ஜாதிகுரு சங்கப்
காரியதரிசி திரு. எல்
வன்சா குறிப்பிட்
யாழ். சிங்கள மகா
யாலயத்தில் திரு
கிருஷ்ணபிள்ளை தலை
இக்கூட்டம் நடைபெ
திரு. ஆரியவ
தொடர்ந்து பேசு
கூறியதாவது:-
'வருங்காலச் சந்
னரைக் கல்வி கற்பி
ஆசிரியர்கள் நாம் எ
ணிச் செயற்படவே
என்பதே இந்த ஸ்தா
தின் கொள்கையும்,
சியமுமாகும். நா
எதிர்காலச் சுமை
தாங்கவிருக்கும் இ

# ...ார்க்கங்களின்

## ...ரைவில் தமிழ் அறிவு பெற்று விடுவேன்!

### ...பகுதி வித்தியாதிபதி சொல்கிறார்

உடுவில், புதன்
...டுவில் கிராமசபைப்
...பில் எட்டுப்பாடசாலை
...இருந்தும் ஒரு பாட
...கூட மகாவித்தியால
... இல்லாமல் இருப்
...வலைக்குரியது. இப்
...ாலை மகாவித்தியா
...க்கக்கூடிய பிள்ளைகள்
...க இருந்தபோதிலும்
...சதி மற்றும் பாட
...வசதிகள் இல்லாமை
இது தரமுயர்த்தப்
...லை. பெற்றோரும்
...வர்களும் ஒத்துழைத்
மிக விரைவில் இப்
...ாலையை மகாவித்தி
...மாக்க நடவடிக்கை
...பன்"

...வில் சைவமகாஜன
...பாசாலை பெற்றோர்
...பர் சங்க ஆண்டுவிழா
...பிரதம விருந்தினராகக்
...கொண்டு உரையாற்
...டபகுதி கல்வியதிபதி
...டபிள்யூ டி சி மகதந்
...மற்கண்டவாறு கூறி

...வியதிபதி திரு மகதந்
...டுவில் கிராமசபை
...சசனர் திரு சி.முத்து
... மூதலை உறுப்பி
...ிரு ந நீதிராசா, பிர
...ல்வி அதிகாரி ஏ சந்
...ரம்பிள்ளை நியாய
திரு சதாசிறீனிவாசன்
...பசர் இணுவில் சுந்த
...காவில் வாசலில்
... ஆரம்...தில் விழா
...பத்துக்கு ஊர்வல
அழைத்துவரப்பட்

...ப்படி வித்தியாசாலை
...ல் கல்வியதிபதி திரு
...தந்தில விஞ்ஞான
...கூடத்திற்கான அத்தி

வாரக்கல்லை நாட்டிவைத்தார்.

பெற்றோர் ஆசிரியர் சங்க ஆண்டுவிழாவிற்கு மேற்படி வித்தியாசாலை தலைமைஆசிரியை திருமதி சோ இரத்தினம் தலைமை வகித்தார், கல்வி அதிபதி தமது பேச்சின்போது இப்பாடசாலைக்கு மிகவிரைவில் பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்கப் போவதாக தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசியதாவது -

எதற்கும் அரசாங்கத்தின் உதவியை நாடுவது நல்லதல்ல பொதுமக்களின் உதவியுடன் இவ்விஞ்ஞான கூடத்தை அமைக்க முன்வந்துள்ள உங்கள் திறமையை பாராட்டுகிறேன் இப்பாடசாலையை அடுத்துள்ள சுற்றுடலில் நூற்றுக்கு நூறு இந்து மக்கள் வாழ்வதும் இங்கு தமிழ் இசைக்கலை வளர்வதும் பாராட்டக் கூடியவை இக்கட்டிடம் பூர்த்தியாவதற்கு முன் நான் தமிழ்மொழியை படித்து சிங்கள - தமிழ் ஒற்றுமைக்கு ஒரு சின்னமாக விளங்குவேன் இக்கல்லூரியின் வளர்ச்சிக்கான ஒவ்வொரு நடவடிக்கையிலும் துரித முயற்சி எடுப்பேன்

திரு சதா சிறீனிவாசன் திருவாளர்கள் செ இராசதுரை எஸ் முத்துலிங்கம் திரு நீதிராசா கே தேவசிகாமணி ஏ சந்திரசேகரம் பிள்ளை உட்பட பலர் பேசினர்

திரு வே குமாரகுலசிங்கம் நன்றியுரை கூறினார்

கைகளைப் பிணைத்த படி

## காதல் ஜோடி ரயில் முன் பாய்ந்து தற்கொலை!

கொழும்பு, புதன் இளம் ஜோடியொன்று கைகளைக் கட்டியபடி யாழ். மெயில்வண்டி முன்னால் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டன. இச்சம்பவம் நேற்றிரவு கணேவத்தைப் பகுதியில் நடந்தது இளம்பெண் ஸ்தலத்திலேயே மரணமானார். வாலிபன் பலத்த காயங்களுடன் மகோ ஆஸ்பத்திரிக்கு கொண்டுசெல்லப்படும் போது மரணமானார். சம்பவம் நடந்த இடத்தில் பாடசாலை புத்தகங்களும் டயரியொன்றும், ஆறுகடிதங்களும் காணப்பட்டன

வடக்கு – கிழககில்

## கள்ளக்குடியேற்றக்காரருக்கு சிங்களப்பயிற்சி அளிக்கிறார்களாம்

கோட்டை, புதன் கள்ளக் குடியேற்றக்காரர்கள் லங்கையின் எந்தப் பகுதிக்கும்சென்று தொழில் செய்யக் கூடியதாகதொழில் பயிற்சியும், சிங்களமொழியைப் பேசவும் எழுதவும் கூடியதாக மொழிப்பயிற்சியும் அளிக்கப்படுகின்றதாம் இதற்கான பயிற்சி நிலையங்கள் வடக்குக்கிழக்குப்பகுதியில்ஏராளமாகசெயற் படுவதாகதுப்பறியும் பொலிசார் அரசாங்கத்துக்கு அறிவித்திருக்கிறார்களாம்

இந்தச் செய்தி 'டிவிரெஸ' பத்திரிகையிலும், 'வீக்கென்ட்' பத்திரிகையிலும் வெளிவந்துள்ளது.

இந்தியாவிலிருந்து இலங்கைக்குவரும் கள்ளக் குடியேற்றக்காரர்கள் நாட்டின் எந்தப்பகுதிக்கும் சென்று கஷ்டமில்லாமல் வேலைவசதி தேடிக்கொள்ளும் விதத்தில் அவர்களுக்கு பயிற்சியளிப்பதே ஸ்தாபனரீதியில் நடைபெறும் இந்தப்பயிற்சி நிலையங்களின் அடிப்படைக் கொள்கையென்று துப்பறியும் பொலிசார் சுட்டிக்காட்டியிருக்கிறார்களாம்.

வவனியாவிலிருந்து காங்கேசன்துறைவரைக்கும் இம்மாதிரி பயிற்சி நிலையங்கள் இருப்பது தெரியவந்துள்ளதாம்.

மன்னார், திருகோணமலைப் பகுதியிலும் இந்தப் பயிற்சி நிலையங்கள் இருப்பது துப்பறியும் பொலிசாரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாம்.

இதில் முதல்கட்டமாக அமைச்சர்கள், ஆட்சிமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் சொல்லிக் கொடுக்கப்படுமாம் சிங்களவர்கள் அல்லாதவர்கள் அதிகமாகவசிக்கும் பிரதேசங்களின் ஊர் பெயர்களும் சொல்லிக்கொடுக்கப்படுமாம் தொழில்தேடிக்கொள்ளவும் வடக்கு கிழக்குப் பிரதேசம்பற்றிய விபரங்களும் சொல்லிக் கொடுக்கப்படுமாம்

திருகோணமலையில் கள்ளக்குடியேற்றம் உக்கிரமடைந்துள்ளதாகவும் இதனால் ராணுவபொலிஸ் படைகளை அதிகரிக்க அரசாங்கம் முடிவு செய்திருப்பதாகவும் மேற்படிசெய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

......

### ஆலோசகர் கண்டுபிடிப்பு?

கோட்டை வியாழன் சேகுவேரா இயக்கத்தின் பின்னணியில் நின்று ஆலோசனை வழங்கிவருவது யார் என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. இப்புரட்சி இயக்கத்திற்கு கொழும்பிலிருக்கும் அந்நியத் தூதரகம் ஒன்றுதான் பின்னணியில் இருந்து உதவிவருவதாக நம்பப்படுகின்றது

தற்போது குற்றத்தடுப்புப் பிரிவு இதுபற்றித் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது. இவற்றின் அறிக்கை வெளியாகிய பின்னர் சேகுவேரா இயக்கத்திற்கு தூண்டுதலாக இருக்கும் அந்நியத்தூதரக அதிகாரிகள் இருவர் வெளியேற்றப்படலாம், எனத் தெரியவருகின்றது.

ஈழத்து எழுத்துலகில் ....

## நிறையும் குறையும்!

கடந்த 22 ஆண்டுகளில் ஈழத்தமிழ் எழுத்தாளர்களின் படைப்புக்களைக் கொண்ட ஒரு நூற்காட்சி உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்ற இலங்கைக்கிளையினரால் பம்பலப்பிட்டியில் நடைபெற்றது. கொழும்பிலே வாழ்கின்ற தமிழன்புமிக்க பெரியோர்கள், இளைஞர்கள், அரசாங்க சேவையாளர்கள் பல்கலைக்கழகம், சட்டக்கல்லூரி மற்றும் பாடசாலை மாணவர்களும் அங்கே நூற்காட்சியை கண்டு சென்றனர். ஈழத்தமிழரின் எழுத்துவன்மையையும் அவர்களது தனித்துவத்தையும்காட்டும் நோக்கத்துடன் ஏற்படுத்தப்பட்ட இந்தக்காட்சி ஆடம்பரமாகக் காணப்படாவிடினும் எழுத்துலகில் ஈழத்தமிழ் மக்களின் குறைநிறைகளையும் தேவைகளையும் எடுத்தியம்பும் முறையில் அமைந்திருந்தது. இங்கே பல்வேறு நூல்களும் பார்வையாளரின் பயன் நாடி பல்வேறு பகுதிகளாக பிரித்துவைக்கப்பட்டிருந்தன

சமயசம்பந்தப்பட்ட நூல்கள் தமிழ்மக்களின்பல்வேறு சமய ஈடுபாடுகளையும் பிரதிபலிக்கும் வகையில் காணப்பட்டன.

சிறுகதைப்பகுதியும் கவிதைப் பகுதியும் அதிகமானோரை அங்கே நின்று செல்லச்செய்தன கொழும்பிலே தமக்குத் "தமிழ்வராது" என்று கூறிக்கொள்வோரையும் புறக்கணிக்காதவகையில் ஈழத்தமிழரின் ஆங்கிலப் படைப்புக்களையும் நடுவிலே வைத்திருந்தனர். சில தமிழ்ப்பெரியோரின் சட்டத்துறை நூல்கள் ஆங்கிலத்தில் காணப்பட்டன. ஈழத்தமிழர்களுக்குப் பயன் பெறும்வகையில் சட்ட நூல்கள் தமிழினில் இல்லை இப்படியான நூல்கள் எழுதப்படவும் இல்லை!

பக்கத்து அறையிலே காணப்பட்ட நூல்களில் பெரும்பாலானவை அரசினரின் திணைக்களத்தினரால் மொழிபெயர்க்கப்பட்டவையாக காணப்பட்டன. பொதுவாகக்கூறினால் ஈழத்தமிழ் எழுத்தாளர்களின் சொந்த அறிவியல் படைப்புக்கள் மிகக்குறைவு சாமுவேல் சிறினினால் நூறு ஆண்டுகளுக்கு முன்னர் பெருமளவில் மொழிபெயர்க்கப்பட்ட மருத்துவக் கலையில்கூட, பேராசிரியர் சின்னத்தம்பியவர்களின் இரண்டு நூல்கள் மாத்திரம்தான் இதுவரையில் வெளிவந்து காணப்பட்டன

சஞ்சிகைகள் வைக்கப்பட்டிருந்த பகுதியை நோக்கும் பொழுது ஈழத்திலே புதிதாக அரும்புகின்ற சிலவற்றில் கூட தென்னிந்திய நட்சத்திரங்களின் புகைப்படங்களையே கவர்ச்சியாகச் சேர்த்துள்ளனர். அறிவியலைக்கொண்ட எந்த சஞ்சிகையும் இன்று ஈழத்தில் வெளிவருவதாகத் தெரியவில்லை. அறிவியல் கலையை மாத்திரம் தாங்கிவந்த "அறிவொளி" இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தபோதிலும் இந்த சஞ்சிகை இப்பொழுதுவருவதில்லை

'மெத்த வளருது மேற்கே-
அந்தமேன்மைக்
கலைகள் தமிழினில்
இல்லை"

என்று பாரதி அன்று கூறிய போதிலும் இன்றுகூட அறிவியற்கலை நூல்களை தமிழினில் ஆக்க எமது அறிவியல் கற்ற தமிழறிஞர்கள் முன்வரவில்லை.

முடிவாக இந்த நூற்காட்சி எமது நாட்டவரின் தமிழ்ப்படைப்புக்களை ஓரளவு முழுமையாக காட்டுவதால் எம்மிடையே குறைவாகவுள்ள சில பகுதிகளை நாம் நன்றாக அறிந்து கொள்ள முடிகின்றது' கலை, இலக்கியம், கவிதை போன்ற பகுதிகள் ஈழத்தமிழ் எழுத்தாளர்களின் ஆர்வத்தைநன்றாகஎடுத்துக் காட்டிய பொழுதிலும்

(8-ம் பக்கம் பார்க்க)

## சோஷலிஸத்தை நிறுவுவதில் ...ஆசிரியர்க்குபெரும்பங்குஉண்டு

...ழ்ப்பாணம், வியாழன்
...ிரியர்களின் பிரச்னை
...பார்க்கும் போது இட
...ம்தான் பாரிய பிரச்
...வுள்ளது. ஆசிரியர்க
...ய சம்பளம் குறை
...ால் அவர்களின்
...ிடத்திற்கு அருகி
... கடமையாற்ற அனு
வேண்டும். இதனால்
...ர்கள் தமது போக்கு
...ச்செலவை மிச்சப்
...லாம். இடமாற்றப்
...ளை மனிதாபிமா
...டன் அணுகவேண்டு
...ாலை வளர்ச்சியிலும்
...றசெலுத்தவேண்டும்
...சங்கத்தில் எத்தகைய
... நோக்கமும் கிடை

...வாறு ஸ்ரீலங்கா ஜாதிக
...க வட பிரதேசச்
...ின் விசேட பொதுக்
...த்தில் பேசுகையில்
...குரு சங்கப்பொதுக்
...ரிசி திரு. எல்.ஆரிய
... குறிப்பிட்டார்.
... சிங்கள மகா வித்தி
...த்தில் திரு. வ
...பிள்ளை தலைமையில்
...ட்டம் நடைபெற்றது.
. ஆரியவன்சா
...ர்ந்து பேசுகையில்
...தாவது:-
...காலச் சந்ததியி
... கல்வி கற்பிக்கும்
...ர்கள் நாம் என எண்
... செயற்படவேண்டும்
...தே இந்த ஸ்தாபனத்
...ாள்கையும், இலட்
...ாகும். நாட்டின்
...ாலச் சுமையைத்
...ிருக்கும் இன்றைய

பாலர்களுக்கு நல்ல முறையில் கற்பிக்க வேண்டும். எமது பிள்ளைகளைச் சரியான முறையில் படிப்பிப்பதன் மூலம் எமது பொறுப்புக்களைச் சரிவரச் செய்யமுடியும்.

சோஷலிஷ நாடுகளில் ஆசிரியர்களுக்குக் கூடுதலான மதிப்புக்கிடைக்கிறது. டாக்டர் என்ஜினியர்களுக்குரிய சம்பளமே அந்நாடுகளில் ஆசிரியர்களுக்குக் கிடைக்கிறது. இந்நாட்டில் சோஷலிஸ சமுதாயத்தை அமைப்பதில் ஆசிரியர்கள் முக்கிய பங்கைச் செலுத்தினால் மக்களரசாங்கத்தின் மதிப்பைப் பெறலாம்.

நாம் எந்த அரசாங்கத்திற்கும் பந்தம்பிடிக்கும் நிலைக்கு ஆளாகமாட்டோம்.

ஆசிரியர்களைத் தூர இடங்களுக்கு இடமாற்றம் செய்வதினால் அரசாங்கம் ஆசிரியர்களின் நல்லெண்ணத்தை சம்பாதிக்க முடியாது.

எந்தத் தொழிற்சங்கமும் இன மத வேறுபாடுகளாக அமையக்கூடாது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக ஆசிரிய சங்கங்களிடையே தமிழ் சிங்கள மூஸ்லிம் ஆசிரியர்களுக்கெனத் தனியான சங்கங்கள் இருந்துவருகின்றன. எமது போராட்டங்களை அரசாங்கத்துக்கு உணர்த்தவேண்டும்'

வடமாநில வித்தியாதிபதி திரு. மகாதந்தில பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு இன்னும் ஒருவருடத்தில் தமிழில் பேசுவேன் என உறுதியளித்தார் ஜாதிக குருசங்க உபதலைவர் திரு டீ. வை குலத்துங்க உட்பட வேறுபலரும் பேசினர்

(உடுப் நிருபர்)

......

### மருத்துவர்கள் பட்டியல்

அல்லைப்பிட்டி, புதன் இலங்கையிலுள்ள ஒவ்வொரு தொகுதி தோறும் அரசினரின் அங்கீகாரம் பெற்று வைத்தியம் செய்யும் சுதேச மருத்துவர்களையும் ஆங்கில மருத்துவர்களையும் அங்கீகாரம் பெறுமல் வைத்தியம் செய்யும் சுதேச ஆங்கில மருத்துவர்களின் தொகைகளையும் அவர்களைப் பற்றிய விபரங்களையும் அரசாங்கம் அவ்வப் பகுதி சுகாதார இன்ஸ்பெக்டர்கள் மூலம் திரட்டி வருகின்றது.

......

கோட்டை, புதன் கூட்டுறவு இலாகாவின் கீழ் வேலைசெய்யும் ஊழியர்களின் பட்டியலைத் தயாரிக்கும் நடவடிக்கையில் கூட்டுறவு ஆணையாளர் ஈடுபட்டுள்ளார்.

சகல கூட்டுறவு சங்கங்களிலும் கடமையாற்றும் ஊழியர்களின் விபரங்களை அனுப்பி வைக்குமாறு கோரும் சுற்று நிருபம் ஒன்றை கூட்டுறவு ஆணையாளர் அனுப்பிவைத்துள்ளார்.

ஆசிரியருக்கு கடிதம்

### இந்நாட்டுச் சோஷலிசமும் தமிழனும்

இன்று எங்கும், எப்பவும் சோஷலிசம் பற்றிப் பேசாத ஆட்களில்லை. பிரியாவிடை வைபவங்களிலும்சரி, இலக்கிய விழாக்களிலும் சரி, கல்யாண வைபவங்களிலும் சரி, எந்தப் பொது வைபவங்களை எடுத்தாலும் அங்கெல்லாம் சோஷலிசம் பற்றி ஒரு வார்த்தை தன்னும் பேசாத இடமில்லை. இன, மத, சாதி வேறுபாடற்ற சோஷலிச ஆட்சியே இங்கு நடதுகிறோமென்று வடக்கே, கிழக்கே வரும் மந்திரிமார்கள் வேறு பேசிப் பேசித் தமிழ் மக்களின் அபிமானத்தை. ஒத்துழைப்பைப் பெற முயற்சிப்பது ஒருபுறம்; தமிழரைப் புறக்கணிக்காது ஆட்சி செய்யும் இன்றைய சோஷலிச அரசாங்கத்தை ஆதரித்தால்தான் உரிமை கிடைக்குமென்று தமிழ் மக்களின் மத்தியில் சில அரசியல்வாதிகள் பேசிவருவது ஒருபுறம்.

இன, மத, சாதி வேறுபாடு காட்டாது சோஷலிச ஆட்சி செய்கிறோமென்று கூறும் இவ்வரசாங்கம் பதவிக்கு வந்த கடந்த எட்டு மாத காலத்தில் தமிழ்மக்களுக்குச் செய்தவை என்ன என்பதைச் சோஷலிசம் பேசும் தமிழ் அரசியல்வாதிகள் தமிழ் மக்களுக்கு எடுத்துச் சொன்னால் மிக நன்றாக இருக்கும்.

வெளிநாட்டுச் செலாவணி என்ற போர்வையில் தமிழ்நாட்டுச் சஞ்சிகைகள் படங்களுக்குத் தடை, பல்கலைக்கழகப் புகுமுகப் பரீட்சையில் இன அடிப்படையில் தரம் பிரித்தல், தமிழ்ப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றுக்குறை, தமிழ் அரசாங்க ஊழியர்களின் பிரச்னை, காங்கேசன்துறைமுக அபிவிருத்தி பி போடல், இப்படியான பல பிரச்னைகள் தீர்க்கப்படவில்லை? மிகச் சுலபமாகத் தீர்க்கக் கூடிய இப்பிரச்னைகளையே தீர்க்கமுடியாமல் அல்லது தீர்க்க மனமில்லாமல் இருக்கும் இந்த அரசாங்கம் சோஷலிசம் பேசுவதுதான் சற்றுப் புதிராகவும் சந்தேகமாகவும் உள்ளது

வேலைவாய்ப்பில் இன, மத. சாதி வேறுபாடற்று, எல்லா மக்களுக்கும் சமசந்தர்ப்பம். சம வேலைக்கு சம சம்பளம்! இதுதான் சோசலிஸத்தின் அடிப்படைத் தத்துவம். ஆனால், இன்று நடைமுறையில் நடப்பது என்ன? அரசாங்க சேவையில் சிங்கள ஊழியனைப் போன்று தமிழ் ஊழியன் நடத்தப்படுகின்றனா? சென்றஆட்சியாளரினால் தண்டிக்கப்பட்டு சேவையிலிருந்து நீக்கப்பட்ட சிங்கள ஊழியர்களுக்கு இவ்வரசாங்கம் பதவிக்கு வந்தவுடன் வேலையுடன் பதவி உயர்வும் வழங்கி, அத்துடன் வேலை நிற்பாட்டிய திகதியிலிருந்து சம்பளப் பாக்கிப் பணமும் கொடுக்கப்பட்டது ஆனால், வேண்டிய சிங்களத் தகைமைப் பரீட்சையில் சித்தியடைந்து சிங்கள மொழியிலேயே திருப்திகரமாக வேலைசெய்யும் புதிய தமிழ் அரசாங்க ஊழியருக்கு. காலம் கடந்து சிங்களப் பரீட்சையில் சித்தியடைந்தமை என்ற ஒரே காரணத்திற்காக, நிற்பாட்டிய சம்பள உயர்வு மட்டுமல்லாது சித்தியடைந்த திகதிக்குப் பின் வந்த சம்பள உயர்வுகள் தானும் வழங்கப்படாது அடிப்படைச் சம்பளத்தில் வைக்கப்பட்டிருக்கிறார்கள் இதுதான் இந்நாட்டு சோசலிசமா?

ப. புவிநாதன்
சிவப்பிரகாசம் ரோட்,
யாழ்ப்பாணம்.

உலகத் தமிழாராய்ச்சிக் கழக ஆதரவில்

# புத்தகச் சந்தை நடத்தத் திட்டம்

## தனிநாயகம் அடிகள் அறிக்கை

அனைத்துலகத் தமிழாராய்ச்சிக் கழகத்தினரின் இலங்கைக் கிளை ஒழுங்கு செய்த தற்காலத் தமிழ் நூற் கண்காட்சி அண்மையில் கொழும்பில் நடைபெற்றதையொட்டி பேராசிரியர் தனிநாயகம் அடிகளார் வெளியிட்டுள்ள அறிக்கை கீழே தரப்படுகிறது.

"இந்த நூற்காட்சியைப் பார்க்கும்போது ஈழத்து எழுத்தாளரும், அறிஞரும், கலைஞரும் எல்லாத் துறைகளிலும் ஈடுபட்டுவந்திருக்கின்றனர் என்பது தெளிவாகின்றது. கவிதை, புனைகதை, நாடகம் இவற்றில் மிகுதியான நூல்கள் இருப்பினும் திறனாய்வு, பண்பாடு, வரலாறு முதலிய ஏனைய துறைகளிலும் நம் ஆராய்ச்சியாளர் ஈடுபட்டு வருவதைக்கண்டு மகிழாமலிருக்கமுடியாது. உலகத் தமிழாராய்ச்சிக் கழகத்தினுடைய முதன்மையான நோக்கம் தமிழியல் ஆராய்ச்சியை உலகெங்கும் வளர்ப்பதேயாம். இக்கழகம் எழுத்தாளர்களுடைய கழகமன்று. ஆசிரியர்களுடைய கழகமுமன்று. ஆனால் ஆராய்ச்சியாளர்களுடைய கழகம். அதுவும் பல்கலைக் கழக நிலையிலுள்ள ஆராய்ச்சியை வளர்க்கும் கழகம். ஒவ்வொரு கழகமும் தமக்குரிய சிறப்பான நோக்கங்களுக்காக அமைக்கப்பட்டு இயங்குகின்றன. அவ்வாறே உலகத் தமிழாராய்ச்சிக் கழகமும் சில சிறப்பான நோக்கங்களுக்காக அமைக்கப்பட்டு உலக மொழிகளை ஆட்சி மொழிகளாகக் கையாண்டுவருகிறது.

இந்த நூற்காட்சியின் பயனாகத் தமிழ்நூல்களிடையே விற்பனையும் விரிவு அமைதல் வேண்டும். பல்வேறு நூல்களைக்கொண்ட ஒரு புத்தகக் கடையை இலங்கையில் அரிதாகவே காணக்கூடும். இந்தக் குறையை நீக்குவதற்குப் புத்தகக் கடைகளும், விற்பனையாளரும் வருங்காலத்தில் முயற்சிகள் எடுப்பதாகக் கூறியிருக்கின்றனர். தமிழ் நூல் ஒன்றிற்கு இலங்கையில் எளிதாக விலையாகும் படிகளின் தொகை ஏறக்குறைய முந்நூறு அல்லது நானூறு தான். இத்தொகையை ஆயிரம் அல்லது இரண்டாயிரத்திற்குவளர்த்தாலேதான் பதிப்பாளர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் போதிய ஊதியம் கிடைக்கும். மேலும் தென்னிந்தியாவிலும், மலேசியா, சிங்கப்பூரிலும் இலங்கையில் வெளியிடப்படும் தமிழ் நூல்களுக்கு ஒரு சந்தையை நாம் ஏற்படுத்துதல்வேண்டும்.

ஈழத்தார் தமிழ்த்துறைகளைப் பற்றி ஆங்கிலத்தில் எழுதிய நூல்கள் தென்னிந்தியாவில் தோன்றிய நூல்களைவிடச் சிறந்தவை. மிகுதியானவையுங்கூட. இவற்றையும் நாம் உலகின் புத்தகக் கடைகள் மூலமாகப் பரப்புதல்வேண்டும்.

இந்த நோக்கங்கள் நிறைவேறுவதற்காக ஐப்பசித் திங்களில் புத்தகச் சந்தை ஒன்றினை நடத்துவதற்கு ஏற்பாடுகள் உலகத் தமிழாராய்ச்சிக் கழகத்தின் ஆதரவில் நடத்த எண்ணிவருகிறோம். வெவ்வேறு பதிப்பகத்தார் தத்தம் நூல்களை ஒரே மன்றத்தில் வைத்துக் காட்சியளிக்கவும், விற்பனை செய்யவும் நடவடிக்கைகள் எடுக்க எண்ணிவருகிறோம்.

இந்த நூற்காட்சியை நடத்துவதற்கு உதவியும், ஒத்தாசையும் நல்கிய பெரியோர்க்கும் மாணக்கர்களுக்கும் நன்றி தெரிவித்துள்ளோம். புத்தகக் காட்சியை நன்முறையில் நடாத்த பெரும் முயற்சி எடுத்த கே. சி. தங்கராசாவை எவரும் மறக்கமுடியாது.

# உடுவில் கிராமசபைக்கூட்டம் ஒத்திவைப்புபற்றிநடவடிக்கை

## அங்கத்தவருக்கு ஆணையாளர் தகவல்

தாவடி, புதன்

'உடுவில் கிராமசபைக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டமை சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படுவதாக உடுவில் கிராமசபையின் 10-ம் வட்டார அங்கத்தவர் திரு. செ. இராசதுரைக்கு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கடித மூலம் அறிவித்துள்ளார்.

உடுவில் கிராமசபைக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டமை சம்பந்தமாக உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்குத் தந்திமூலம் அறிவித்திருந்தனர். அத்தந்தியில் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது:-

உடுவில் கிராமசபைக் கூட்டம் ஆரம்பமாகி சென்ற கூட்ட அறிக்கை வாசிக்கப்பட்டபின், கடிதங்கள் வாசிக்கத் தொடங்கிய போது பார்வையாளரை வெளியேறும்படி சபைத்தலைவர் கூறினார்.

பார்வையாளர் இருக்கலாமென ஒரு சாரார் பிரேரணை கொண்டுவந்தனர். மற்றொருசாரார் பார்வையாளர் வெளியேற வேண்டும் என்ற பிரேரணையையும் கொண்டுவந்தனர். ஆனால் வாக்கெடுப்புக்கு விடாமலே கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதாகத் தலைவர்கூறினார். இருசாராரும் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் ஆதரவாளர்கள்.

—

## வீதி திருத்தம்

ஊரதீவு, புதன்

ஊரதீவு சங்குமாலடி வீதியில் கடலரிப்பால்ஏற்பட்ட சிதைவு தற்போது செப்பனிடப்படுகிறது. இரண்டு வருடங்களுக்கு முன் ஒதுக்கப்பட்ட பன்னீராயிரம் ரூபாய் இதில் செலவிடப்படுகிறது.

—

## ஆசிரியர்கள் பற்றுக் குறை

பதுளை, ஞாயிறு

ஊணுகல தமிழ்மகாவித்தியாலயத்தில் 600 மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். ஆனால் அங்கு கற்பிப்பவர்கள் 5 ஆசிரியர்களும் 4 ஆசிரியைகளுமாவர்.

இந்தப் பாடசாலையில் 1970ல் 500 மாணவர்கள் கல்வி கற்றபோது மொத்தம் 14 ஆசிரியர்கள் கல்வி கற்பித்தார்கள். இந்த வருடம் பதின்மூன்று ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளதால் இப் பாடசாலையில் ஆசிரியர்கள் பற்றுக்குறை ஏற்பட்டுள்ளது.

## அபிவிருத்தி சபை நிர்வாகிகள்

நெல்லியடி, புதன்

நெல்லியடி பட்டினசபை அபிவிருத்திச் சபை அங்குரார்ப்பணக் கூட்டம் வடமராட்சிக் காரியாதிகாரி திரு ஜெயகாந்தன் தலைமையில் நடைபெற்றபோதுபின் வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் எஸ். ஜெயகாந்தன் (காரியாதிகாரி) உபதலைவர்: நெல்லியடி ப. ச. தலைவர்: திரு எஸ். தேவசகாயம் காரியதரிசி எஸ். செல்லையா.

பயிர்ச் செய்கைக் குழுப் பிரதிநிதியாக திரு மார்க்கண்டுவும் கி. மு. சங்கப் பிரதிநிதியாக ஆ. குலேந்திரன் ஜே. பி.யும் பட்டின சபை அங்கத்தவர்களின் பிரதிநிதியாக திரு பாஸ்கரனும் அரசாங்க உத்தியோகத்தர்களின் பிரதிநிதியாக திரு பாலச்சந்திரனும் தெரிவுசெய்யப்பட்டனர்.

......

## சுதந்திரக்கட்சிகிளை நிர்வாகிகள்

புலோலி, புதன்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக் கிளையொன்று ருக்தித்துறை வாணக் குடியிருப்பு என்னுமிடத்தில் திறந்து வைக்கப்பட்டது.

இக்கிளையின் நிர்வாகிகளாகப் பின்வருவோர் நியமிக்கப்பட்டுள்ளனர். தலைவர்: திரு கே ரி இராஜசிங்கம், உபதலைவர்கள்: திரு கே கேசவநம்பி, திரு வி நடராசா, திரு எஸ் பரராஜசேகரம். செயலாளர் திரு ஏ தங்கராசா, உபசெயலாளர் திரு கே சபாரத்தினம், தனாதிகாரி: திரு கே கணேசமூர்த்தி, உபதனாதிகாரி: திரு எஸ் ஞானப்பிரகாசம். மற்றும் 6பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

......

## புதுவருட நிர்வாகிகள்

மாவிட்டபுரம், புதன்

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீநாராயண கிராமமுன்னேற்றச் சனசமூகநிலைய வருடாந்தக் கூட்டம் எஸ். சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: நா. கனகையா உபதலைவர், க. செல்லையா, செயலாளர்:ஐ வயிரமுத்து, உபசெயலாளர்: மு இராசலிங்கம், பொருளாளர்: அ. அருளம்பலம், உப பொருளாளர்:க துரைராசா, விளையாட்டுச் செயலாளர்: க நடராசா.

நிர்வாகசபை உறுப்பினரும், தெரிவு செய்யப்பட்டார்கள்.

—

## தட்டுப்பாடு

சுழிபுரம், புதன்

தொல்புரம் அரசினர் வைத்தியசாலையில் மருந்து கட்டும் துணிவகைகளுக்குப் பெருந் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மேலும் பல அவசிய மருந்துவகைகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது வைத்திய அதிகாரி மேலதிகாரிகளுக்கு இவ்விடயமாக அறிவித்தும் எவ்வித பலனும் கிட்டவில்லையாம்.

—

## புயலுக்கு 82 பேர் பலி

நியூயோர்க், பெப். 23

தென் அமெரிக்காவில் வீசிய கடும் புயல் ஒன்றின் காரணமாக 82 பேர் பலியாகியிருக்கிறார்கள். மிஸிஸிப்பி லூஸியானா ஆகிய இடங்களில் இந்த மரணங்கள் ஏற்பட்டன. ஏராளமானவர்கள் காயங்களுக்குள்ளானார்கள்.

# சட்ட ரீதியாக வாழும் அனைவருக்கும் உரிமை

## இ. தொ. கா. கோரிக்கை

நல்லூர், புதன்

இலங்கையில் சட்ட ரீதியாக வசிக்கும் எல்லாமக்களும் இனம், நிறம், பால், மொழி, மதம், ஜாதி, அரசியல் வேறுபாடுகள் தேசிய அல்லது சமூக அந்தஸ்து, பிறப்புத் தராதரம் ஆகிய எத்தகைய பேதமும் இன்றி எல்லோரும் எல்லாத்துறைகளிலும் சம அந்தஸ்தோடும் சமஉரிமையோடும் வாழ வழிஇருக்கவேண்டும்.

மேற்கண்டவாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், புதிய அரசியல் திட்டத்தின் அடிப்படைத் தீர்மானங்களுக்கு சமர்ப்பித்துள்ள திருத்தயோசனைகளில் தெரிவித்துளது.

காங்கிரஸ் தெரிவித்துள்ள யோசனைகளில் சில பின்வருமாறு:

வேற்றுநாட்டுப் பிரஜையின் குழந்தைகள் நீங்கலாக இலங்கையில் பிறந்த ஒவ்வொருவரும் இந்நாட்டு வம்சாவழிப் பிரஜையின் அந்தஸ்தைப் பெற்றவராயிருக்க வேண்டும்.

இலங்கைக்கு வெளியிலே ஒருவர் பிறந்திருப்பினும் அவரின் பெற்றோரில் ஒருவர் இலங்கைப் பிரஜையாயிருப்பின் அவர் வம்சாவழிப் பிரஜையின் அந்தஸ்துப்பெற வேண்டும்.

இன்றுள்ள சட்டத்தின் படியோ அல்லது இனி ஏற்படும் சட்டத்தின்படியோ. பிரஜாவுரிமை பெற்றவர்கள் அல்லது இனிமேல் பெறக்கூடியவர்கள் ஒவ்வொருவரும் இலங்கைப் பிரஜைகளாவர்.

வேற்றுநாட்டுப் பிரஜா உரிமையை விரும்பிப்பெற்றவர் யாரும் இலங்கைப்பிரஜையாயிருக்கமுடியாது.

### அடிப்படை உரிமைகள்

இலங்கையில்சட்டரீதியாக வசிக்கும் எல்லாமக்களும் இனம், நிறம், பால், மொழி, மதம், ஜாதி, அரசியல் வேறுபாடுகள், தேசிய அல்லது சமூக அந்தஸ்து, பிறப்புத் தராதரம் ஆகிய எத்தகைய பேதாபேதமும் இன்றி எல்லோரும் எல்லாத்துறைகளிலும் சமஅந்தஸ்தோடும் சம உரிமையோடும் வாழ வழியிருக்கவேண்டும்.

அரசியல் சாஸனத்தில் அமையும் அடிப்படை உரிமைகள் சுதந்திரங்களுக்கு முரணான செயல்கள் நிகழும் பொழுது, ஒரு நீதிமன்றத்திலிருந்து முறையான பரிகாரம்பெறும் உரிமை இலங்கையில்சட்டரீதியாகவாழும் எல்லா மக்களுக்கும் கீழ்கண்ட முறையில் இருக்க வேண்டும்.

### தொழிலாளர் சாசனம்

இலங்கையில் சட்டரீதியாக வசிக்கும் எல்லாருக்கும் வேலைவாய்ப்புக்கேற்ற நியாயமானதும் அனுகூலமானதுமான சூழ்நிலைக்கு உத்தரவாதம்.

எவ்வித பாகுபாடுமின்றி சமவேலைக்குச் சமசம்பளத்தோடு கூடிய போதுமான வேதன உரிமை.

தொழிற்சங்கங்கள் அமைக்கவும் அவைகளில் சேரவும் உரிமை.

தனக்கும் தன் குடும்பத்திற்கும் போதுமான சுகாதார வாழ்க்கைக்கு வேண்டிய உணவு, உடை, வீடு, வைத்தியம். சமூகசேவை ஆகியவற்றிற்கேற்ற வசதி உரிமையும், வேலையில்லா நிலை, வியாதி, செயலின்மை விதவைக்கோலம், வயோதிபம், தன் சக்திக்கு அப்பாற்பட்ட சூழ்நிலையின் காரணமாக வாழ்க்கை வசதிக்குறைவுகள் ஆகியவற்றிற்கு பாதுகாப்பும் உத்தரவாதமும்.

### சுயாட்சியும் சட்டசபையும்

அரசியல் சாசனமே எல்லாவற்றிற்கும் சிரமாகும். சுயாட்சி அதிகாரமும் மக்களிடமே இருக்கும். அவ்வதிகாரத்தை அவர்கள் அரசியல் சாசனத்திலிருந்து பெறக்கூடிய சட்டசபை, நீதிக்குழு, இரு அங்கங்கள் கொண்ட நிர்வாகக் குழு இவைகளின் மூலம் பிரயோகிக்கவேண்டும்.

நீதிக்குழு சார்பற்ற தன்மையுடையதாகவும், சட்டசபையியற்றும் சட்டங்கள் ஏற்புடையனவா என்பதை ஆராயவும் தீர்ப்புச் சொல்லவும் உரிமையுடையதாகவும் இருக்கவேண்டும்.

சட்டசபையின் இரு அங்கங்களில் ஒன்று தேசிய சபையாகவும், மற்றது மேல் சபையாகவும் இருக்கவேண்டும்

### மொழி உரிமை

தீர்க்கப்படாமலிருக்கும் மொழிப் பிரச்சினை பிரதான இனத்தாரிடையில் மனக்கசப்பு ஏற்படுவதற்குக் காரணமாயிருப்பதால், தமிழ் பேசும் மக்கள் தீவின் எல்லாப் பகுதியிலும் அரசாங்கத்தோடும், அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட கூட்டுறவு ஸ்தாபனங்களோடும் தமிழிலேயே கடிதத் தொடர்பு கொள்ளவும், தமிழிலேயே பதில் பெறவும், தங்கள் தாய்மொழியிலேயே கல்வி கற்பிக்கவும் கூடிய உரிமைகளை அரசியல் சாசனத்தில் இணைப்பதின் மூலம் மொழிப் பிரச்சனைக்குத் தீர்வு காணப்படவேண்டும்.



## ஓய்வுபெற்ற தலைமையாசிரியர்

நெடுந்தீவு, புதன்

நெடுந்தீவு அ மி த க. பாடசாலையில் 35 வருடகாலம் தலைமையாசிரியராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற திரு க. இராமநாதன் நெடுந்தீவின் திடீர் மரணவிசாரணை அதிகாரியாக பல ஆண்டுகளாகக் கடமையாற்றி வருகிறார்.

......

## வடமராட்சியில் நெல் விளைச்சல்

பருத்தித்துறை திங்கள்

வடமராட்சிப் பகுதியில் போதிய மழை காரணமாகவும் பயிர்ச்செய்கைக் குழுக்கள் மூலம் பெற்ற பசளை போன்ற உதவிகள் காரணமாகவும் இவ்வாண்டு முன்னெப்பொழுதுமில்லாத அளவு அபரிமிதமான நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இயற்கை ஒத்துழைத்தால் அடுத்தாண்டு மேலும் ஒரு சிறந்த சாதனையை நிலைநாட்டலாமென விவசாய அதிகாரிகள் சிலர் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

# தமிழ்நாடு தேர்தல் களம்

# சென்னையில் தேர்தல் கலவரங்கள்; பொலிசார் உட்பட 23 பேருக்கு காயம்

## அண்ணா உருவப்படம் நொருக்கப்பட்டது

## கழக கொடிக்கு தீ; கடைகள் சேதம்

[ நமது சென்னை நிருபர் ]

தமிழ் நாட்டில் தேர்தல் தினம் நெருங்க நெருங்க, வன்முறைச் சம்பவங்களும், தாக்குதல்களும், மோதல்களும் அதிகரித்துவருகின்றன. நேற்று தியாகராஜ நகரில் சினிமா நடிகர் சோ பேசிய கூட்டத்தில் நடந்த கலவரத்தில் 11 பேர் காயமடைந்தனர். இங்குள்ள திராவிட முன்னேற்றக்கழக காரியாலயத்தில், ஜனசங்கத்தினருக்கும் கழகத்தினருக்குமிடையே ஏற்பட்ட மற்றொரு மோதலில் 12 பேர் படுகாயமடைந்தார்கள்.

தி. மு. கழகக் காரியாலயத்திலிருந்த அறிஞர் அண்ணாதுரையின் உருவப்படம் இத்தாக்குதல் சம்பவத்தின்போது நொருக்கப்பட்டதோடு, காரியாலயத்திலிருந்த கழகக் கொடிக்கும் தீ வைக்கப்பட்டது. இரு சம்பவங்களின்போது ஒரு பொலிஸ் இன்ஸ்பெக்டரும், 8 கான்ஸ்டபிள்களும் காயமடைந்தனர். இதுசம்பந்தமாகச் சந்தேகத்தின்பேரில் 4பேர் கைது செய்யப்பட்டனர்

காரியாலயத்திலிருந்து அருகிலிருந்த ஹோட்டல் ஒன்றின்மீதும் கற்கள் வீசப்பட்டதால் ஹோட்டல் முன் பக்கம் சேதமடைந்தது. இங்குள்ள குடிசைப் பகுதிகளுக்குள்ளும் சில கோஷ்டியினர் புகுந்து தாக்குதல் நடத்தினுர்கள்.

இங்கு தினமும் நடைபெற்றுவரும் தேர்தல் பிரசாரக் கூட்டங்களுக்குப் பலத்த பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது. தினமும் சென்னை நகரில் மட்டும் 30 ட்டங்களுக்கு மேல் நடக்கின்றன. தமிழ் நாடு முழுவதும் தேர்தல் பிரசாரத்தில்ஈடுபடிருக்கும் நடிகர் சிவாஜி கணேசனுக்கும் பொலிஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

### நடிகர்கள் பிரசாரம்

நேற்று முதல் சினிமா நடிகர்கள் தேர்தல் பிரசாரத்தில் இறங்கியுள்ளார்கள். நடிகர் அசோகன், தேங்காய் சீனிவாசன், கண்ணன் ஆகியோர் திராவிட முன்னேற்றக்கழக வேட்பாளர்களை ஆத த்துக் கூட்டங்களில் பேசிவருகின்றனர். துக்ளக் பத்திரிகை பறிமுதல் செய்த பின்னர் நடிகர் சோ சிண்டிகேட் அபேட்சகர்களை ஆதரித்துக் கூட்டங்களில் பேசிவருகிருர். நடிகர் சோவின் நாடகங்கள் தினமும் நடைபெறுகின்றன. தேங்காய் சீனிவாசனின் நாடகமும் நடைபெறுகிறது. இவை தவிர முதல் அமைச்சரின் நாடகங்களும் நடைபெற்றுவருகின்றன.

தியாகராஜநகர் தி மு கழக வேட்பாளர் டி. வி நாராயணசாமியை ஆதரித்து சினிமா நாடக நடிகர்கள் பிரசாரம் செய்துவருகின்றனர்.

என். எஸ். கே. மதுரம் டி. வி. குமுதினி, லலிலா, விஜயா, புஷ்பமாலா, டி என் கிருஷ்ணன், குண்டுக் கருப்பையா, பிரண்ட் ராமசாமி, சந்திரகாந்தா, முத்துலட்சுமி, தாம்பரம் லலிதா, விஜயகுமாரி மல்லிகா, பாண்டியன், கரிக்கோல் ராஜு ஆகிய சினிமா நடிகர்கள் நேற்று தியாகராஜ நகரில் தி மு க வேட்பாளரை ஆதரித்துப் பிரசாரம் செய்தார்கள்.

தி மு க அபேட்சகர்களை ஆதரித்து எம் ஜி ராமச்சந்திரனும் கே ஆர் ராமசாமியும் சூருவளி பிரசாரம் செய்துவருகின்றனர்சிண்டிகேட் வேட்பாளர்களை ஆதரித்து நடிகர் சிவாஜி கணேசன் பிரசாரம் செய்துவருகின்றூர் நடிகர் எஸ் எஸ் ராஜேந்திரனை இம்முறை பிரசாரக் கூட்டங்களில் காணமுடியவில்லை. சினிமா நடிகர்களைப் பார்ப்பதற்காக தினமும் கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாது வீதியோரங்களில் மக்கள் லட்சக்கணக்கில் திரண்டு நிற்கின்றனர்

### ராஜாஜி வேண்டுகோள்

தமிழ்நாட்டில் தி மு க அரசின் அபாயம் மிக உறுதியாகிவிட்டதென்றும் தமிழ் நாட்டு ஆட்சியிலிருந்து தி மு கவினரை அகற்றவேண்டும் என்றும் டில்லி ஆட்சியிலிருந்து இந்திராகாந்தியை அகற்றவேண்டுமென்றும் நேற்றுராஜாஜிவேண்டுகோள் டுத்துள்ளார். இந்த காரியத்தில் தாமும்தலைவர் காமராஜரும் சேர்ந்து உழைப்பது மக்களுக்குமிகவும்மகிழ்ச்சிதருவதைதாய் உணருவதாகவும் அவர்தெரிவித்துள்ளார்.

### தி மு க வுக்கு வாய்ப்பில்லை

தமிழகத்தில் தேர்தல்நிலவரங்களை நேரில் காண்பதற்கு வந்த அந்தமான் தி மு க செயலாளர் திரு மருதவாணன். தமிழகத்தில் தி மு கவுக்கு வெற்றி வாய்ப்பில்லை யென்று தெரிவித்துள்ளார். அவர் விமானத்தில் அந்தமானுக்கு திரும்பிச் சென்றுள்ளார்.

புதுவை பாராளுமன்ற காங்கிரஸ் வேட்பாளர் என். சேதுராமனை ஆதரித்து முன்னுள் மந்திரி திரு கு ம குருசாமிப்பிள்ளையும் சட்டமன்ற உறுப்பினர் திரு எஸ் எம். ஜம்புலிங்கமும் தீவிரமாக தேர்தல் பிரசாரம் செய்துவருகின்றூர்கள்.

சேலத்தில் திராவிடக் கழகம் நடத்திய ஊர்வல நிகழ்ச்சிகளுக்கு தி. மு. க. அரசே பொறுப்பு என்று ராஜ்யசபை காங்கிரஸ் உறுப்பினர் திரு. ஆர். டி. பார்த்தசாரதி கூறினூர். சென்னையில் 'துக்ளக் பத்திரிகையை தி. மு க. அரசு பறிமுதல் செய்தது பற்றி குறிப்பிட்ட அவர் இந்த நடவடிக்கை அரசியல் சட்டத்துக்கு முரணானது என்று கூறினூர்.

மதுரை மத்திய தொகுதியைச் சேர்ந்த மேலாமசி வீதியில் உள்ள தேர்தல் அலுவலகம் முன்பு வைக்கப்பட்ட சுவரொட்டிகளை அகற்றிவிடுமாறு நேற்று பொலிசார் தெரிவித்தனர். இதற்குள் செய்தி அறிந்த காங்கிரஸ்வேட்பாளர் திரு குறிஞ்சி நெடுமாறன் அங்கு சென்றதும் பொலிசார் பேசாமல் போய்விட்டனர்,

திருச்சியில் தி மு க அரசாங்கத்திற்குஎதிராகமானவர்கள்நடத்திய ஹர்த்தால் கூட்டத்தில் முதலமைச்சர் கருணாநிதியின் உருவப்படத்தை கொளுத்தினூர்கள். இக்கூட்டத்தில் இரண்டாயிரம் மாணவர்கள் கலந்துகொண்டார்கள். பொதுஇடங்களில் நிறுவப்பட்டுள்ள பெரியார் ஈ வே. இராமசாமியின் உருவச்சிலைகளை உடனடியாக நீக்க வேண்டுமென முதல் அமைச்சரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் இக்கூட்டத்தில் நிறைவேறியது.

### சிவாஜிக்கு பாதுகாப்பு

சிவாஜி கணேசனுக்குப் பலத்த பொலிஸ்பாதுகாப்பு அளிக்கப்படவேண்டுமென சென்னை பெத்துநாயக்கன் பேட்டை சிவாஜி மன்றச் செயலாளர் திரு. டி வி. சந்திரசேகரன் அரசிடம் கோரியுள்ளார். சிவாஜியை கொலைசெய்ய முயற்சிகள் நடந்ததற்கு மன்றச்சார்பில் கண்டனம் தெரிவிப்பதாகவும் அவர் கூறினூர்

### கண்டனம்

'துக்ளக்' இதழை தி. மு க. ஆட்சி பறிமுதல் செய்திருப்பது பிரிட்டிஷ் ஆட்சியில் கூட நடைபெருத அநியாயம் என்று நேற்று சிவாஜி கணேசன் மதுரை தமுக்கம் மைதானத்தில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் கூறினூர் இந்த அட்டகாசத்தை மக்கள் ஒழித்துக்கட்ட வேண்டியது அவசியமென்றும் சிவாஜி கூறினூர்

முதலமைச்சர் கருணாநிதியுடன் போட்டியிடும் மாணவர் தலைவர் குடந்தை இராமலிங்கத்தை ஆதரித்து நூற்றுக்கணக்கான மாணவர்கள் சைதாப்பேட்டை தொகுதி முழுவதும் பிரசாரம் செய்தார்கள். இத்தொகுதியில் பிரமாண்டமான ஊர்வலமொன்றையும் மாணவர்கள் நடத்தினூர்கள்.

### காமராஜரும் ராஜாஜியும்

சென்னை கடற்கரையில் இம்மாதம் 25-ம் திகதி நடைபெறவிருக்கும் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் காமராஜரும். ராஜாஜியும் ஒரேமேடையில் முதல் தடவையாக பேசுகின்றூர்கள். சிண்டிகேட் சுதந்திரக்கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களும் இக்கூட்டத்தில் பேசுவார்கள்.

## அனலைதீவு பாடசாலைகளில் 13 ஆசிரியர் தட்டுப்பாடு

அனலதீவு, புதன்

அனலைதீவிலுள்ள 3 பாடசாலைகளிலும் ஆசிரியர் பற்ருக்குறை நிலவிவருகிறது. இங்குள்ள ஒரே ஒரு மகாவித்தியாலயத்தில் ஏழு ஆசிரியர்களின் இடம் காலியாகவிருக்கின்றது. 20 ஆசிரியர்கள் கடமையாற்றி வந்த இப்பாடசாலையில் தற்போது 13 ஆசிரியர்கள் மட்டுமே பணிபுரிகிருர்கள். இதனுல் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சதாசிவ மகாவித்தியாலயத்தில் தரமான விஞ்ஞான ஆய்வுகூடமிருந்தும் விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர் இன்றி மாணவர் அவதியுறுகின்றனர் இரண்டாம் மூன்ருந் தடவைகளில் ஜி. சி. ஈ. சாதாரண பரீட்சை எடுத்த மாணவர்களும், ஜி. சி. ஈ. முதலாம் வருட மாணவர்களும் ஒரே வகுப்பில் இருந்தே இங்கு கல்வி கற்கின்றனர். சில வகுப்புகளில் அறுபதுக்கும் மேற்பட்ட மாணவர்கள் இருக்கின்றனர்.

புவியில் பட்டதாரி ஆசிரியர் இவ்வருட ஆரம்ப முதல் இங்கு நியமிக்கப்பட்டிருந்த போதிலும், இங்கு புவியியல் கற்பிக்கப்படுவதில்லை பிரயோக கணிதம் கற்பிக்கத் தகுதிவாய்ந்த பட்டதாரி ஆசிரியர் இருந்தபோதிலும் பிரயோக கணிதமும் கற்பிக்கப்படுவதில்லை இவ்விரு ஆசிரியர்களுக்கும் குறிப்பிட்ட பாடங்கள் கற்பிப்பதற்கு நேரசூசிகை போடப்படாததே காரணம் எனக் கூறப்படுகிறது. தகுதியான ஆசிரியர்கள் இருந்தும் மாணவர்கள் பயன்பெற முடியாதிருப்பது பற்றி பெற்ருர் பெற்ருர் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

அனலைதீவு தெற்கு தமிழ்க் கலவன் பாடசாலையில் 5 ஆசிரியர்களுக்குப் பதிலாக இரண்டு ஆசிரியர்கள் மட்டுமே 5 வகுப்புக்களைக் கவனித்து வருகின்றனர். ஆங்கில ஆசிரியர் இன்றி மாணவர்களின் கல்விநிலை பாதிக்கப்படுகிறது.

அனலைதீவு வடலூர் தமிழ்க் கலவன் பாடசாலையிலும் 6 ஆசிரியர்களுக்குப் பதிலாக 3 ஆசிரியர்களே கடமை புரிகின்றனர்.

......

### கோரிக்கை

அல்லைப்பிட்டி, புதன்

வேலணைகிழக்கு மக்களின் பஸ் போக்குவரத்துக் கஷ்டத்தை நீக்கும் பொருட்டு வேலணை அம்மன் கோவில் வீதியினூடாக ஓர் இ. போ. ச. பஸ் வண்டிச் சேவையொன்றை ஆரம்பிக்க வேண்டுமென வேலணை கிழக்குப்பகுதி மக்கள் நீண்டநாட்களாக கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

## 'பொருளாதார அபிவிருத்திக்கு கல்வி அவசியம்'

கோட்டை, புதன்

நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு கல்வியும் முக்கிய கருவியாகும். நாட்டின் அபிவிருத்திக்குத் தேவையான கல்வியை அளிக்காவிட்டால் எதிர்நோக்கியிருக்கும் பல்வேறு பிரச்னைகளைத் தீர்த்துவைக்க இயலாது. நாட்டின் சமூக பொருளாதாரத் துறைகளை அபிவிருத்தி செய்யக்கூடிய கல்வி முறையை அரசாங்கம் நன்கு திட்டமிட்டுச் செயல்படுத்தவிருக்கிறது.

போகவத்தையில் உள்ள ஒரு மகாவித்தியாலயத்தின் புதிய கட்டிடமொன்றைத் திறந்துவைத்துப் பேசுகையில் வென்னப்புவ ஆட்சி மன்ற அங்கத்தவர் திரு. ஏ. பொன்சேகா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில், நாட்டின் பொருளாதாரசீர்கேட்டுக்கு காரணமான நாட்டின் கல்வியமைப்பை விரைவில் மாற்றி, அரசாங்கம் பொருளாதார முன்னேற்றத்திற்கான கல்வித் திட்டங்களைக் கொண்டுவந்து செயல்படுத்திருக்கிறது.

## இன்றைய பலன்

மாசி மாதம் 13-ம் திகதி (25-2-71)

மேஷம்- அறிவுத் தாகம் மேலோங்கி நிற்கும். ஆராய்ச்சிகளில் ஈடுபட விரும்புவீர்கள். இன்று சுப தினம்.

ரிஷபம்- உறவாடிக் கெடுப்பதற்கு பகையாளிகள் வருவர். உற்சாகம் குன்றும். பிரயாணத்தின் போது பொருள் தவறக் கூடும்.

மிதுனம்- ஒளி மயமான தினம். கல்வித்துறையில் முன்னேற்றமுண்டு. ஆசிரியர்கள் பாராட்டப்படுவார்கள்.

கடகம்- எதையும் முன்னணியில் நின்று செய்வதை இன்று பின்போடவும். பின்னணியில் பிளவுக்கு இடமுண்டு

சிம்மம்- செய்தொழிலால் சிறப்புண்டு மேலதிகாரிகளின் ஆதரவும் கிடைக்கும். சிலருக்கு அதிர்ஷ்ட லாபங்களும் கிடைக்கலாம்.

கன்னி- முயற்சியால் முன்னேற்றம் கிடைக்கும். பத்துக்களுடன் தொடர்புகள் பெருகும். பம்பரம்போல் சுழன்று பணியாற்றுவீர்.

துலாம்- உடல்நலத்தில் அபிவிருத்தி தென்படும். குடும்பத்தில் சுககருமங்களும் இடம்பெறும்.

விருச்சிகம்- மனநிறைவுக்கு இடமுண்டு. மதிப்பும் உயரும். அறிவாற்றலால் அரசபோகமும் கிடைக்கும்.

தனுசு- ஏக்கத்தின் சாயல் தாக்கும். எதிர்பாராத விதமாகச் சிக்கல்களில் மாட்டிக்கொள்ள நேரிடும்.

மகரம்- இனிய வார்த்தைகளின் மூலம் எல்லோரையும் வசீகரிப்பீர்கள். பொருள்வரவுக்கும் இடமுண்டு.

கும்பம்- ஆசை அலைகளால் அவப்பெயருக்கு இடமுண்டு குறுக்குவழிகளில் இறங்க வேண்டாம். வீட்டில் சிறுபிணி தலைதூக்கும்

மீனம்- மாதுருவழிப் பெருமைக்கு இடமுண்டு. மனம்போல் காவும் நடக்கும். இன்று கல்வியில் சிறப்புண்டு யர்ந்த தினம்.

சோதிடக் கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

# திருக்கேதீஸ்வர யாத்திரிகர் பஸ் கார்-மோட்டார் சைக்கிள் மோதல்

## அபாயகரமான நிலையில் மூவர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், வியா. திருக்கேதீஸ்வரத்திலிருந்து யாழ்ப்பாணம் திரும்பிக்கொண்டிருந்த யாத்திரிகர்கள் பஸ்சும், காரும் மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் மூவர் படுகாயத்துக்குள்ளாகி ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை 4-30மணியளவில் பளைக்கு அண்மையில் இவ்விபத்து நிகழ்ந்தது.

யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த ஒரு மோட்டார் சைக்கிளை திடீரென நிற்பாட்டியபோது, பின்னால் ஒன்றின்பின் ஒன்றாக வந்துகொண்டிருந்த காரும் பஸ்சும் மோதிக்கொண்டதாகத் தெரிகிறது.

சுமார் 60 யாத்திரிகர்கள் இ. போ. ச. பஸ்சில் பிரயாணம் செய்துகொண்டிருந்தனர். காரின் பின்பக்கம் பலத்த சேதத்துக்குள்ளானது. கார்ச் சாரதியான காரை நகரைச்சேர்ந்த கணேசன் (வயது32) பளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு அம்புலன்ஸில் அனுப்பிவைக்கப்பட்டார்.

காயத்துக்குள்ளான ஒரு ஆணும் பெண்ணும் பளை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றனர். யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த புறக்டர் ஒருவரும் அவரது உறவினர்களும் திருக்கேதீஸ்வரத்திலிருந்து திரும்பிவந்தகாரே விபத்தில் சிக்கியது. மோட்டார் சைக்கிளில் பிரயாணம் செய்தவர்கள் மயிரிழையில் உயிர் தப்பினர்.

பஸ்ஸில் பிரயாணம் செய்தவர்களுக்கு சிறு சிறு காயங்கள் மட்டுமே ஏற்பட்டன. பளைப் பொலிசார் ஸ்தலத்தில் விசாரணை நடத்தினர்.

### நரிவேட்டையில் இவர்கள்

பருத்தித்துறை, புதன்

மிருகங்கள் மூலம் பரவும் தொற்றுநோய்கள் பற்றி ஆராய்வதற்கான முயற்சியில் இலங்கைப் பல்கலைக்கழக மாணவர் ஈடுபட்டுள்ளனர். இதற்காக வடபகுதியில் பல்வேறு இடங்களில் அவர்கள் நரி, முயல், வெள்வெளி ஆகியவற்றை வேட்டையாடி வருகின்றனர். உள்ளூர் வைத்தியர்களுடனும் இவர்கள் தொடர்புகொண்டுள்ளனர்.

—•••

### ஈழத்து

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அறிவியல் பகுதிகள் நாம் வெட்கப்படும் அளவிற்கு வெற்றிடமாகவே இருக்கின்றன.

இந்த நிலை மாற அறிவியல் படித்தவர்கள், உயர் கல்வி தாய்மொழியில் பயிற்றப்படும் இன்றைய நிலையிலாவது முன்வருவார்களா?

பொதுவாக—இந்த நூற்காட்சி அரசியல் சமயபேதமற்ற முறையில் நன்றாக அமைந்த காரணத்தால் இதனை யாவரும் வரவேற்கின்றனர். மிகவும் சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் தமிழ்நூல்களைத் திரட்டி எங்கள் முன்தந்த பெருந் தொண்டை நாம் பாராட்டவேண்டும். இதனைப்பார்த்தபின்னர் இதனை ஏற்படுத்திய உலகத் தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளையினர் "4-வது ஆராய்ச்சி மகாநாட்டையும்" பார்போற்றும் முறையில் நடத்துவார்களென்ற நம்பிக்கை ஏற்படுகிறது.

—பி. ரி. ஜெயவிக்கிரமராஜா
(மருத்துவக்கல்லூரி, கொழும்பு)

......

### 5 நபர்கள் மீண்டும் ஆஜர்

யாழ்ப்பாணம், வியாழன்

180 ருத்தல் லக்டோஜன் மாவை திருடியதாகப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுப் பிணையில் சென்ற 5 சந்தேக நபர்கள் இன்று யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. கொல்வின் மென்டிஸ் முன்னிலையில் ஆஜராவார்கள்.

யாழ்ப்பாணம் மாநகரசபை பிரதான வீதியிலுள்ள பிரசவ விடுதிக்கு வழங்கப்பட்ட 5 ருத்தல் கொண்ட 86 டின்களைத் திருடியதாக மருத்துவதாதி ஒருவர் உட்பட ஐவர் சந்தேகத்தின் பேரில் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் முன்னிலையில் இவர்கள் ஆஜர் செய்யப்பட்டபோது இவர்களைப் பிணையில் செல்ல அனுமதித்து மீண்டும் இன்று காலை ஆஜராகும்படி மாஜிஸ்டிரேட் உத்தரவிட்டார்.

சந்தேக நபர்கள் சார்பில் புறக்டர்களான ஏ. அன்ரனி, எஸ். கனகரத்தினம், ஜிம்மி ராஜரத்தினம் ஆகியோர் ஆஜரானார்கள்.

(கா. நி.)

......

வேலணை, புதன்

வேலணை அம்பிகை மகளிர் பாடசாலையில் இருக்கும் கிணறு பாவிக்கப்படாமல் அசுத்தமடைந்து இருப்பதினால் மாணவர்கள் பெரிதும் கஷ்டம் அனுபவிப்பதாகப் பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

### பரந்தன் கறி உப்பு

## தனியார் விற்க உரிமையில்லை

யாழ்ப்பாணம் வியா

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் மேசை உப்பைத் தனியார் எவரும் விற்பனை செய்யப்படாதென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுசம்பந்தமாக விற்பனை இலாகா அதிகாரி தெரிவித்ததாவது: பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையில் தயாராகும் மேசைஉப்பு பொதிகளில் அடைக்கப்பட்டு சில்லறையாக விற்கப்படும் தரத்திற் சிறந்த இந்த மேசை உப்பை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கும் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றது. சில்லறைக்கு 35 சதம்பெறுமதியான பொதி மாஜரின் போன்ற உணவுகளுக்கு அத்தியாவசியமானது. இந்த வாரம் முதல் இவ்வுப்பு சந்தைப்படுத்தப்பட்டு வருகிறது.

(கு. வி. ம.)

## மீன்பிடி வள்ளத்தை கடற்படைப் படகு மோதியது

யாழ்ப்பாணம், வியா

மயிலிட்டியிலிருந்து மீன் பிடிக்கச் சென்ற வள்ளமொன்றை கடற்படைப் படகு மோதியதில் நால்வர் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் அதிகாலை 5 மணியளவில் கடலில் இச்சம்பவம் நடந்ததாகப் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடற்படையினர் வள்ளத்தை மோதியது மட்டுமல்லாமல் அவ்வள்ளத்தில் இருந்தவர்களைக் காப்பாற்றுவதற்கோ, கரைசேர்ப்பதற்கோ எவ்வித முயற்சியும் செய்யவில்லையாம். அத்தோடு அவ்வள்ளத்தில் சென்று சிறு காயமடைந்தவர்களைப் பயமுறுத்தியதாகவும் சொல்லப்படுகிறது.

(கு வி ம)

### ஓய்வு பெற்றனர்

தாவடி, புதன்

இலங்கைச் சிறுகைத்தொழில் இலாகாவைச் சேர்ந்த நெசவுத்தொழில் மேற்பார்வையாளர் திரு. எஸ். கனகரத்தினம், நெசவு ஆசிரியை திருமதி வே. பூரீதம்மா ஆகியோர் சேவையினின்றும் இளைப்பாறியுள்ளனர்.

......

### இளம் பெண் தீக்குப் பலி!

யாழ்ப்பாணம், வியா.

தட்டாதெருவைச் சேர்ந்த 24 வயதான காளியம்மா என்ற இளம்பெண் தீக்குப் பலியானார். எரிகாயங்களுடன் நேற்று முன் தினம் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவர் அங்கு மரணமானார்.

மேசையில் இருந்த குப்பி விளக்குத் தவறி கீழே விழுந்தபோது காளியம்மாவின் தலையில் வீழ்ந்து தீப்பற்றியதாக விசாரணையில் தெரிய வந்தது. திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. இராசநாயகம் விபத்து மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

### சுவீப்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

| | |
|---|---|
| 18 S 0330 | 10 T 0364 |
| 28 T 0482 | 06 T 0921 |
| 07 T 0128 | 29 U 0578 |
| 22 U 0846 | 14 U 0623 |
| 14 V 0883 | 12 V 0583 |
| 20 V 0238 | 20 V 0753 |
| 03 V 0384 | 29 V 0667 |
| 30 V 0403 | 28 W 0989 |
| 17 W 0955 | 05W 0437 |
| 27 W 0830 | 14 W 0398 |
| 10 X 0177 | 21 X 0065 |
| 12 X 0555 | 29 X 0474 |
| 16 X 0988 | 10 Y 0196 |
| 18 Y 0853 | 31 Y 0046 |
| 07 Y 0068 | 19 Y 0207 |
| 03 O 0677 | 29 Z 0263 |
| 31 Z 0268 | 18 Z 0576 |
| 27 Z 0087 | 19 F 0783 |

இவை யாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

......

### 2 கட்சிகள் பகிஷ்கரிப்பு

புதுடில்லி, பெப் 25

மேற்கு வங்காளத்தில் தேர்தல் தலைமை கமிஷனர் கூட்டியுள்ள அனைத்துக்கட்சி மகாநாட்டை ஐக்கிய இடதுசாரி ஜனநாயக முன்னணி சம்யுக்த சோஷலிஸக்கட்சி ஆகியன பகிஷ்கரித்துள்ளன.

## சுங்கப் பரிசோதனைக்கு விசேட உத்தியோகஸ்தர்கள் தெரிவு

கோட்டை, வியாழன்

விசேட பரிசோதனை உத்தியோகஸ்தர் பிரிவு ஒன்று சுங்கப்பிரிவில் நியமிக்கப்பட்டுள்ளது. இவர்கள் ஒவ்வொரு சுங்கப் பரிசோதனை நிலையங்களிலும் கடமையாற்றுவார்கள்.

பரிசோதனை உத்தியோகஸ்தர்களும் பொலிசார்களும் கள்ளக்கடத்தலைத் தடுக்கும் நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபடுவார்கள். பாதுகாப்பு வெளிவிகார அமைச்சு கள்ளக்கடத்தலைத் தடுக்க எடுத்துள்ள தீவிர நடவடிக்கையில் ஓர் அம்சமாக விசேட பரிசோதனை உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

ஒவ்வொரு தடுப்பு பரிசோதனை நிலையங்களைக் கடந்து கொண்டுசெல்லும் ஒவ்வொரு பொருட்களும் பதிவு செய்யப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. மணிக்கூடுகள், வைரம், பவுண், ரேடியோ, சேலைகள், அந்நியக் குடிவகைகள் என்பன அதிகமாக கடத்தப்படுகின்றன. மேற்படி பொருள்களை கடத்துவது பற்றி தீவிரமாகக் கண்காணிப்புச் செய்யப்படும் எனத் தெரியவந்துள்ளது.

# தமிழக அரசின் உத்தரவு செல்லாது

## உயர்நீதிமன்றம் தீர்ப்பு

சென்னை, பெப். 26

திராவிடக் கழகத் தலைவர் ஈ. வே. ரா. பெரியாரால் சேலத்தில் நடத்தப்பட்ட பகுத்தறிவு ஊர்வலத்தை ஒட்டி வெளியிடப்பட்ட சுவரொட்டிகளை தமிழ்நாடு அரசாங்கம் பறிமுதல் செய்தது செல்லுபடியாகாதெனவும் இவற்றை மனுதாரிடம் திருப்பிக் கொடுக்குமாறும் சென்னை உயர் நீதிமன்றம் இன்று தீர்ப்பளித்துள்ளது.

சுவரொட்டிகளைப் பறிமுதல் செய்வதற்கான தகுந்த காரணங்கள் அரசாங்க தரப்பில் காட்டப்படவில்லை என அத்தீர்ப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கை திரு. சின்ன அண்ணாமலை தாக்கல் செய்திருந்தார்.

சேலத்தில் கடந்த மாதம் இந்துக் கடவுள் பற்றிய சுவரொட்டிகளை அரசாங்கம் பறிமுதல் செய்ததை எதிர்த்து ரிட்மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

தமிழ்நாடு அரசாங்கம் இந்த ரிட்மனுவை எதிர்த்து எதிர் மனு ஒன்றைத் தாக்கல் செய்தது.

அரசாங்கம் தாக்கல்செய்த எதிர் மனுவில் குறிப்பிட்ட மதத்தையும், பொதுமக்களையும் புண்படுத்துவதாக மேற்படி சுவரொட்டிகள் அமைந்துள்ளதென்றும், பொதுமக்களின் நன்மை கருதியே சுவரொட்டிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதென்றும் தெரிவித்துள்ளது.

### ஹர்த்தால்

சேலத்தில் நடைபெற்ற திராவிடக்கழகத் தலைவர் பெரியார் ஈ. வே. ராவின் பகுத்தறிவு ஊர்வலத்தை ஆட்சேபிக்கும் வகையில் கோயம்புத்தூரில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. கடைகள், ஹொட்டல்கள், வியாபார நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. ஆனால் அரசாங்க செயலகங்கள் வழமைபோல் தம் கடமையைச் செய்தன.

இதேபோல சேலம் திருச்சிப் பகுதியிலும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

### தேவை

சுருட்டுத் தொழிலாளர்கள் தேவை. படுக்கை வசதியளிக்கப்படும். க. குமாரசுவாமி, சுருட்டுக் கொம்பனி, மெயின்வீதி, பருத்தித்துறை.

2466

### மரண அறிவித்தல்

பரமேஸ்வரி இராமலிங்கம் காலமானார். இவர் காலஞ்சென்ற திரு. இராமலிங்கம் (I. C. S.) அவர்களின் மனைவியாரும் மேஜர் ஹரீந்திரன், திருமதி பத்மினி ஜெயரட்ணராஜா, திருமதி உமா நல்லைநாயகன் (C. A. S.) திருமதி சாந்தி சிவப்பிரகாசம், திரு சுந்தரேசன் (பல்கலைக்கழகம்) ஆகியோரின் தாயாரும், திரு. நல்லைநாயகன் (C. A S), திரு. சிவப்பிரகாசம் ஆகியோரின் மாமியாரும், திரு. ஆ. தனபாலசிங்கம் (வழக்கறிஞர்), திருமதி விமலா சிறிகாந்தா ஆகியோரின் சகோதரியுமாவார். அன்னாரின் பூதவுடல் (25-2-71) அன்று வியாழக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு ஈமக்கிரிகைக்காக பி. ஏ. தம்பி வீதி, 14-ம் இலக்க இல்லத்திலிருந்து கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:- ஆ. தனபாலசிங்கம் (வழக்கறிஞர்)

2194

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] கோவில் மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 25-ந் [illegible] வெளியிடப்பட்டது.